www.tamilarangam.net

தீப்பொறி
THEEPPORI

விடுதலைக்கான பாதை எப்பொழுதுமே சிக்கல் நிறைந்தாகவே இருக்கும் அதில் ஓய்வுக்கோ அல்லது அற்ப மகிழ்ச்சிக்கோ என்றும் இடமில்லை. பல இடர்பாடுகளின் மத்தியிலேயே அந்த பயணம் தொடரப்படவேண்டும் என்பது தவிர்க்கமுடியாத வரலாற்று நியதியாக இருக்கின்றது. ஏனென்றால் மனித நாகரீகத்தின் உயர்வான விழுமியங்களை அவ்வளவு சுலபமாக யாராலும் சுவீகாரம் செய்து கொண்டுவிடமுடியாது. அப்படி யாரும் அதை இலகுவில் அடைந்துவிட்டதாக கருதினால் அது போலியானதாக அல்லது தற்காலிகமானதொன்றாகவே இருக்கும்.

2 தமிழீழம் ஆகஸ்ட் 1985 AUGUST 1985 விலை: 3-00

# சிறிலங்கா அரசின் கபட நாடகம்
## போர் நிறுத்த வேளையில்
# நூற்றுக்கணக்கில்
## தமிழ் மக்கள் படுகொலை!

தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்களுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையில் போர் நிறுத்தம் ஏற்பட்டு திம்புவில் சமரச பேச்சுவார்த்தை நடைபெறும் காலத்திலேயே சிறிலங்கா அரசு நூற்றுக்கணக்கான அப்பாவித்தமிழ் மக்களை சுட்டுக் கொன்றுள்ளது. இந்நிலையில் மக்கள் திம்பு பேச்சு வார்தையில் ஏற்பட இருக்கும் முடிவுகள் குறித்து பெரும் அங்கலாய்ப்புடன் இருக்கின்றார்கள். இச் சந்தர்ப்பத்தில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் தமிழீழ விடுதலை இயக்கங்கள் தம் பொறுப்பை செவ்வனே நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட காலத்தில் இருந்து அதை தடுத்து நிறுத்த சிறிலங்கா அரசு செய்துவரும் வஞ்சகமான நடவடிக்கைகளை முழு உலகும் அறியும். தமிழீழ மக்களை பயம் கொள்ளச் செய்து அவர்களது புரட்சிகரப் பயணத்திலிருந்து தடுத்து நிறுத்தி விட, மனப்பால் குடித்த சிறிலங்கா அரசு தோல்வி மேல் தோல்வி கண்டது. ஜுலை, 83 வன்முறையும் அதைத் தொடர்ந்த இன அழிப்புக்களும் கூட தமிழீழ மக்களை பணியச் செய்யவில்லை. நூற்றுக் கணக்கான கோடி ரூபா செலவில் கடற்படைப் படகுகளை, ஹெலிகொப்டர்களை, கவசவாகனங்களை நவீன ஆயுதங்களை கொள்வனவு செய்து சிறிலங்கா அரசு நடாத்திய தாக்குதல்களில் ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான தமிழ் மக்களின் உடமைகள் நாசமாக்கப்பட்டன. ஆயினும் சிறிலங்கா அரசினால் இம்மியளவும் கூட வெற்றிகாண முடியாமல் போய்விட்டது.

இன்றுபோர்நிறுத்தம்திம்புவில் சமரசப் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் வஞ்சக நாடகத்தை சிறிலங்கா அரசு அரங்கேற்ற முன்வந்துள்ளது. திம்பு பேச்சுவார்த்தை இதற்கு முந்திய பேச்சுவார்த்தைகள் போல ஆகிவிடும் என்று கூறுவதற்கில்லை. சிறிலங்கா அரசு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி, வெளிநாட்டுதவிகள் நிறுத்தம், வெளிநாடுகளில் ஏற்பட்ட அபகீர்த்தி போன்றவை. எப்படியும் திம்பு பேச்சுவார்த்தைகள் மூலம் ஒரு சமரசத்திற்கு வரவேண்டிய நிர்ப்பந்தத்தை சிறிலங்கா அரசிற்கு வழங்கியுள்ளன. ஆகையால் இயல்பாகவே திம்பு பேச்சுவார்த்தைகளில் சிறிலங்கா அரசுசில விட்டுக் கொடுப்புகளுக்கு உள்ளாகும் வாய்ப்பு உண்டு. இதனைப் பயன்படுத்தி விடுதலை இயக்கங்கள் தமிழீழ விடுதலையில் ஒரு பெரும் வெற்றியை சாதித்துக் கொள்ள முடியுமா?

சிறிலங்கா அரசு திம்பு பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ள முன்னர் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு சம்மதித்தது தமிழீழ மக்களுக்கு மகிழ்ச்சியளிப்பதாக இருந்தது. ஆனால் ஜுன் 18, 85 லிருந்து அமுலுக்கு வந்த தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கும் சிறிலங்கா அரசுக்குமிடையேயான போர் நிறுத்த உடன்படிக்கை அடிக்கடி 'அரசினால் மீறப்படுவது பழையபடி வேதாளம் முருங்க மரத்தில் ஏறிய கதை போலாகிவிட்டது.

போர்நிறுத்த காலத்திலேயே சிறிலங்கா அரசினால் திருகோணமலையிலும் மூதூரிலும் நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். திம்பு பேச்சுவார்த்தைகள் இரண்டாவது தடவையாக மீண்டும் தொடங்குவதற்கு முன்ன வவுனியாவில் இருநூறுக்கும் அதிகமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். சிறிலங்கா அரசு இந்த அட்டூழியங்களை கூசாமல் செய்து விட்டு வழமை போல் போர் நிறுத்தத்தை விடுதலை இயக்கங்கள் தான் மீறுவதாக தமது வானொலி தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகள் மூலம் பிரச்சாரம் செய்து வருகின்றது. சிறிலங்கா அரசின் இந்த அடாவடித்தனங்கள் திம்பு பேச்சு வார்த்தைகளை குழப்பப் போவதற்கான அறிகுறிகள் அல்ல. இவை யாவும் சமரசம் ஏற்பட்டாலும் இம்மாதிரி அத்துமீறல்களை சிறிலங்கா அரசு தொடர்து மேற்கொள்ளும் என்பதற்கான அறிகுறிகளே, சிறிலங்கா அரசு தற்போதைய திம்பு பேச்சுவார்த்தைகளின் முடிபுகளை ஒருபோதும் கௌரவிக்கப் போவதில்லை என்பதை இந் நிகழ்வுகள் இப்போதே காட்டி நிற்கின்றன.


தமிழீழ மக்கள் அளப்பரிய இழப்புகளுக்கும் இன்னல்களுக்கும் மத்தியில் தமது தேசிய விடுதலைப் போராட்டத்தை, முன்னெடுத்துள்ளார்கள். இறுதிவரை போராடி வெற்றி காண்போம் என்ற திட உள்ளத்துடன் எண்ணற்ற போராளிகள் தம் வாழ்வையும் உயிரையும் அர்ப்பணித்து முன்னெடுத்துள்ள தமிழீழ விடுதலைப் போராட்டம், சிறிலங்கா அரசின் கபட நாடகத்திற்கு பலியாகாமல் பார்த்துக் கொள்வது விடுதலை இயக்கங்களின் கடமையாகும்.

# தமிழீழவிடுதலைப்போராளிகள்



செல்வன்

அகிலன்



## ஆகியோருக்கு எமது இதய
# அஞ்சலிகள்

தமிழீழ விடுதலைக் கழகத்தின் (PLOT) திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் தோழர் சின்னத்துரை கிருபாகரன் (செல்வன், சைமன், வல்லிபுரம்) மூதூர் பகுதி அமைப்பாளர் தோழர் சாமித்தம்பி லோகேந்திரராஜா (அகிலன்) ஆகியோர்) PLOT இராணுவத்தினரால் மார்ச் 26, 1985 அன்று மூதூரில் வைத்து ஆயுதமுனையில் கடத்தப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்என்ற துயரச் செய்தியைமிகவும் வேதனையுடன் அறியத் தருகின்றோம்.

தோழர் கிருபாகரன் பேராதனை பல்கலைக்கழக மாணவன். 1981ம் ஆண்டிலிருந்து PLOTன் அங்கத்தவராக இருந்து வந்தவர். இவரின் கடுமையான உழைப்பு திருகோணமலை மாவட்டத்தில் மாத்திரமன்றி மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளில் PLOT வேரூன்ற காரணமாக இருந்தது செயலதிபர் உமாமகேஸ்வரன் சிறிலங்கா அரசாங்கத்தினரால் தேடப்பட்ட காலத்தில் அவருக்கு திருகோணமலை மாவட்டத்தில் புகலிடம் கொடுத்து பாதுகாத்த முக்கிய பொறுப்பினை தோழர் கிருபாகரன் தனது மாணவப் பருவத்தில் திறம்பட ஆற்றியிருக்கின்றார்.

1981ல் காந்தீயம் திருகோணமலை மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட போது அதன் குடியேற்ற திட்டங்களில் முன்நின்று உழைத்தவர். காந்தீயத்தில் பணியாற்றியபோது சிறிலங்கா இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு கடுமையான சித்திரவதைக்குட்படுத்தப்பட்டார். PLOT இன் திருகோணமலை மாவட்ட பிரசார செயலாளராக பணியாற்றிய காலத்தில் PLOT இன் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் தோழர் யோகன் கண்ணமுத்து கைதுசெய்யப்பட்டிருந்தபோது தோழர் யோகன் கண்ணமுத்துவை விடுதலை செய்யக்கோரி போராட்டங்கள் நடத்திய வேளை இவர் மீண்டும் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டார். PLOTற்கு தென்னிலங்கையிலுள்ள முற்போக்கு சக்திகளுடன் தொடர்பை ஏற்படுத்த பங்காற்றிய தோழர் கிருபாகரன் தென்னிலங்கை தோழர் ஒருவருடன் சிறிலங்கா ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டு பலத்த சித்திரவதை செய்யப்பட்டபோது சகதோழர்களையும் தாபனத்தையும் காட்டிக்கொடுக்காத விசுவாசமான மனயுறுதிமிக்கவராக திகழ்ந்தார்.

ஆகஸ்ட், 1983 இலிருந்து PLOT இன்திருகோணமலை மாவட்ட பொறுப்பாளராகப் பணியாற்றிவந்த தோழர் கிருபாகரன் PLOT இன் தவறான போக்குகளுக்கெதிராக கடுமையான விமர்சனங்களை முன்வைத்துதலைமையுடன் முரண்பட்டிருந்தார்.

தோழர் லோகேந்திரராஜா மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அமைதியான சுபாவமும் ஆரவாரமில்லாத கடுமையான உழைப்பும் கொண்ட இவர் சிறிலங்கா ஆயுதப் படைகளின் கடுமையான தேடுதல்களின் மத்தியிலும்துணிகரமாகப் பணியாற்றினார். எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் முஸ்லிம் மக்களின் ஐக்கியத்தை வலியுறுத்திய தோழர் லோகேந்திரராஜா. அதற்காக அரும்பாடுபட்டு உழைத்தார். மூதூரில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது தமிழ் - முஸ்லிம் மக்களின் ஐக்கியப்பட்ட போராட்டத்திற்கு இவர் சேவை பெரிதும் துணை புரிந்தது. ஏப்ரல் 1984 இலிருந்து மூதூர்பகுதி அமைப்பாளராக பணிபுரிந்த தோழர் லோகேந்திரராஜா PLOT தோழர்கள் கட்டுப்பாடும் நேர்மையும் உடையவர்களாக வாழ வேண்டும் என வலியுறுத்தி வந்ததுடன் அதற்கு முன்னுதார

(2ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீப்பொறி
THEEPPORI

## ஆகஸ்ட், 1985

# கண்ணோட்டம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு முக்கிய கட்டமாக இன்று திம்புவில் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த சமரச முயற்சியில் தமிழீழ மக்களுக்குத் தமிழீழமோ அதற்கு நிகரான அல்லது சற்று குறைவான ஏதாவது தீர்வோ கிடைத்துவிடப்போவதில்லை என்பதும் தெளிவாகிக் கொண்டு வருகிறது. இதனால் ஏற்பட்ட பேச்சுவார்த்தை குழம்பிப்போகும் நிலையைத் தடுப்பதற்கு இந்திய அரசு) தன்னாலான முயற்சிகளைச் செய்து வருகிறது. ஆனாலும் தமிழீழ மக்கள் திம்பு பேச்சுவார்த்தைகள் குறித்து ஆர்வமுடன் இருக்கின்றார்கள்.

தமிழீழ மக்களின் இந்த அக்கறை சமரச முயற்சி வெற்றிகாணும் என்பதால் உருவானதல்ல. முரண்பட்டு மோதிக்கொண்டிருந்த தமிழீழ விடுதலை அமைப்புகள் யாவும் ஒரே மேசையில் அமர்ந்து ஒன்றுபட்டு செயற்படுகின்றகாட்சியே தமிழீழ மக்களின் கவனத்தை கவர்ந்த விடயமாகும்.

ஜூலை, 1983 இன் பின் தமிழீழ விடுதலை அமைப்புக்களில் எதைத்தான் தமிழீழ மக்கள் நிராகரித்தார்கள்- விடுதலை இயக்கங்கள் அனைத்தையும் தமிழீழ மக்கள் ஆதரித்தமைக்கு காரணம் யார் குற்றினாலும் அரிசியாகட்டும் என்ற பரந்த நோக்கமேயன்றி வேறல்ல. கடந்த காலத்தில் ஐக்கியப்படாமல் பிரிந்து நின்ற நிலைமாறி இன்று பிரதான விடுதலை அமைப்புக்கள் யாவும் ஒரே குரலில் செயல்படுவது தமிழீழ மக்களுக்கு புது நம்பிக்கையைக் கொடுத்து வருகின்றது. ரஜீவ் காந்தியின் சாணக்கியத்தையோ ஜே ஆரின் பெரும் தன்மையையோ தமிழீழ மக்கள் நம்பியிருக்கவில்லை. தமிழீழ மக்களின் விமோசனத்திற்கு விடுதலை அமைப்புக்களே வழிகாட்ட வேண்டும்.

தமிழீழ விடுதலை அமைப்புக்கள் தம்மீதுசுமத்தப்பட்டுள்ள பாரிய கடமைகளை ஒருபொழுதும் தட்டிக்கழிக்க முடியாது. அப்படித் தட்டிக்கழிப்பார்களேயாயின், அது தமிழீழ மக்களுக்குச் செய்யும் மிகப் பெரிய துரோகமாகும். இதேவேளையில் விடுதலை அமைப்புக்கள் சிலவற்றின் விஷமத்தனமான நடவடிக்கைகளால் ரத்தக்கண்ணீர் வடிக்கும் தமிழீழ மக்களின் பரிதாப நிலை குறித்தும் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்


விடுதலை அமைப்புக்கள் ஒன்றோடொன்று பகைமையுற்று பகிரங்கமாக ஒருவரையொருவர் சுட்டுக் கொல்வதும், தமது சொந்தப்போராளிகளை சுட்டுக் கொல்வதும் தமிழீழ மக்களை அண்மைக் காலத்தில் மிகவும் பீதியடையச் செய்திருக்கின்றன. விடுதலை அமைப்புக்களின் போராளிகளையும் கேட்பாரற்று கொன்று குவிக்கும் கயமைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன. பொது மக்களை ஆயுதமுனையில் பயமுறுத்தல், பொது மக்களின் உடைமைகளைக் கொள்ளையடித்தல், கடத்திச் செல்லுதல் போன்ற சமூக விரோத நடவடிக்கைகள் கட்டுமீறி நடந்துகொண்டேயிருக்கின்றன.

சிறிலங்கா அரசின் கொடூர அடக்குமுறைக்குள்ளாகித் தவிக்கும் தமிழீழ மக்களுக்கு ஆதாரமாக இருக்க வேண்டிய விடுதலை அமைப்புக்கள் இவ்வாறு நடந்து கொள்வது மிகவும் வேதனைக்குரிய நிகழ்வுகளே. இந்த வேதனைமிகு சம்பவங்களை விடுதலை அமைப்புக்களின் தலைமைகள் அறியாமலில்லை. அதனை மாற்றியமைக்க விரும்பாதவர்கள் என்றுமில்லை. அத்தகைய பொறுப்புணர்ச்சி இருக்கும் காரணத்தினாலேயே தமிழீழ விடுதலை இயக்கங்கள் இன்று ஒரேமேசையில் அமர்ந்து பணி புரிகின்றார்கள். ஒரே குரலில் ஒலிக்கின்றார்கள். என்பதையும் நாம் மறப்பதற்கில்லை.

ஆனால் தலைமைகள் பேட்டிகள், அறிக்கைகள் மூலம் தம் நேர்மையையும் நோக்கையும் வெளிப்படுத்தி மக்களைத் திருப்திப்படுத்தினால் மட்டும் போதாது, அமைப்பு முழுவதிலுமே விடுதலைவேட்கையும் கொள்கைப்பற்றுதலும் மிளிர வேண்டும். அமைப்பின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரினதும் பண்பான வாழ்வுமுறை தமிழீழ மக்களுக்கு நம்பிக்கையும் ஆணிச்சலும் ஊட்டுவதாக இருக்க வேண்டும், விடுதலை அமைப்புக்கள் இனியும் தாமதியாது தமது அங்கத்தவர்கள் அனைவரையும் கொள்கைப் பற்றும் மனித நேசமும், தேசபக்தியும். விடாமுயற்சியும், சலிப்பில்லாத உழைப்பும் சிக்கனமும்கொண்டவர்களாக மாற்ற வேண்டும். இவர்கள் தம் சொந்தத் தோழர்களுக்கும் சக விடுதலை அமைப்புகளை சேர்ந்த போராளிகட்கும் மதிப்பும் கௌரவமும் வழங்கக் கடமைப்பட்டுள்ளார்கள் என்பது வலியுறுத்தப்பட வேண்டும். இவர்களிடையேயான முரண்பாடுகள் சிநேக முரண்பாடுகள். என்றும் அவை பச்சுவார்த்தை மூலமே தீர்க்கப்பட வேண்டும் என்பதும் தெளிவாகபோதிக்கப்படவேண்டும். இவர்கள் மக்களோடு அன்போடும் பண்போடும் பழகுவதற்கு நன்கு பயிற்றுவிக்கப்பட வேண்டும், எளிமையான வாழ்வுமுறை, சிக்கன நடவடிக்கைகள் மூலம் ஆடம்பரமான அநாவசியமான செலவினங்கள் கட்டுப்படுத்தப்படவும், மக்கள்சேவையில் முன்நின்று உழைக்கவும் அவர்கள் உற்சாகப்படுத்தப்படவேண்டும்.

கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று தான்தோன்றித்தனமாக தாபன ஊழியர்கள் நடப்பதை உடனடியாகக் கட்டுப்படுத்துவது விடுதலை தாபனங்களின் முக்கிய பணியாகிறது. தமிழீழ விடுதலைப்போராட்டத்தினை முன்னெடுத்து தமிழீழ மக்கள் விமோசனம் பெற, சிறந்த கொள்கையும் நடைமுறையும்மாத்திரம்பிரகடனப்படுத்தி விட்டால் மாத்திரம் போதாது. போராட்டத்தை முன்னெடுப்பதற்குசிறந்தஊழியர்களும் அவசியம், இதுவே இன்றைய காலத்தின் தேவை. தமிழீழ விடுதலை அமைப்புக்கள் இதனைப் புரிந்துகொண்டு தமது அமைப்புக்களை செப்பனிடும் பொறுப்பை முழுமையாகச்செய்து முடிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

இது எமது விமர்சனம் அல்ல, தமிழீழ மக்கள் அனைவரினதும் வேண்டுகோளுமாகும்.



(1-ம் பக்கத் தொடர்ச்சி) ணமாகவும் திகழ்ந்தார். இவரும் PLOTன் அண்மைக்கால அடாவடித்தனங்களைக் கண்ணுற்று விரக்தியடைந் திருந்தார், இந்த இரு தோழர்களும் மரணத்திற்கு என்றும் அஞ்சி வாழ்ந்தவர்களல்ல வேதனைகளையும் சோதனைகளையும் சவாலாகக் கொண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காகத் தம்மை அர்ப்பணிப்பதற்காகத் திடம் கொண்ட இவர்களை வேலியே பயிரை மேய்வது போல்PLOT இராணுவமே பதவிப் போட்டியாலும் பொறாமையாலும் வீணாக இவர்கள் இன்னுயிரைப் பறிப்பார்கள் என்று யாருமே கற்பனை கூடப் பண்ணியிருக்கவில்லை. விடுதலை உணர்வு கொண்ட அனைவருக்குமே இந்தத்துயரங்கள் புரியாத மர்மங்கள் தான்.

இவ்விரு தோழர்கள் மீதும் பல அவதூறு குற்றச்சாட்டுக்களை PLOT மத்தியது. காட்டிக்கொடுத்தார்களாம், பணமோசடி செய்தார்களாம், பலாத்காரம் புரிந்தார்களாம் என தமது இஷ்டப்படி குற்றங்களை அடுக்கிச் செல்லும் PLOT இனால் இந்தக் குற்றச்சாட்டுகளில் எதையாவது நிரூபிக்கமுடியுமா? விசாரணையை அங்கத்தவர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் அம்பலப்படுத்துவோம் என்றவர்கள் அதற்கு முன்னரே தோழர்களிருவரையும்படுகொலை செய்தமைக்கு காரணம் கூறுவார்களா?

இவ்விரு தோழர்களையும் விசாரிக்கவென்று இந்தியாவிற்கு அனுப்பி வைத்து உண்மையை PLOTஇன் தளநிர்வாகப் பொறுப்பு ஏற்கனவே ஒத்துக்கொண்டிருக்கிறது. இவர்களை இங்கு அங்கத்தவர் முன்னிலையில் விசாரிப்பதற்குசம்மதித்தவர்கள் இனிமேல்என்ன கூறப் போகின்றார்கள். இத்தகைய கொடுமைகள் கேட்பாரற்று அரங்கேறும் கயமைகள் முழு தமிழீழ மக்களும் வெட்கித் தலைகுனியும் வேதனை மிகு சம்பவங்களாகும். இந்த கொலைஞர்களுக்கு இன்னமும் உணவும் உறைவிடமும் அளித்து ஆதரவு வழங்கும் தமிழ் மக்கள் தமது [illegible] செயற்பாடுகளை இனிமேலாவது மீள் பரிசோதனை செய்யும்படி கேட்கின்றோம், நீங்கள் PLOTற்கு வழங்கும் ஆதரவு தமிழீழப் போராளிகளை அழிப்பதற்கே என்பதனை நினைவுபடுத்துகிறோம். தோழர்கள்கிருபாகரனும், லோகேந்திர ராஜாவும் இன்று எம்மிடையே இல்லை. சிறிலங்கா இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டபோதும், சிறிலங்கா இராணுவத்தின் பகைச் செயலுக்கும் தோழர்கள் இருவரினாலும் உயிர்தப்ப முடிந்தது. ஆனால் நன்றிக்கலந்த PLOT இராணுவத்தின் பகைமையை இவர்களினால் வெல்லமுடியாமல் போய்விட்டது. மறைந்த எம்மிரு தோழர்களுக்கும் எமது இதய அஞ்சலியை செலுத்துகின்றோம். இந்தத் தியாகச் செம்மல்களின் பணியைத்தொடர ஆயிரமாயிரம் இதயங்கள் என்றுமே தயாராயிருக்கின்றனஎன்று உறுதியிட்டுக்கூறுகின்றோம்.

இந்த இரு போராளிகளைப் பறிகொடுத்துதவிக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம். தோழர் கிருபாகரனும் லோகேந்திர ராஜாவும் தமது இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டதனை தெரிந்துகொண்ட பின்பும் அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை ஆராய்கின்றோம், உட்கட்சிப் போராட்டம் நடத்துகின்றோம் PLOT இனை ஜனநாயக ரீதியான அமைப்பாகமாற்றுகின்றோம் எனப் பாசாங்கு செய்துகொண்டு தங்கள் பதவிகளையும் சலுகைகளையும்காப்பாற்றிக்கொண்டு PLOTஇன் அராஜகப் போக்குகளுக்குவக்காலத்து வாங்கிக்கொண்டிருக்கும் PLOT தோழர்களே! மார்ச் 26,1985ல் தோழர் கிருபாகரனை மட்டக்களப்பின் எல்லைப்புறத்திலிருந்து வந்த இராணுவம் கைதுசெய்தபோது தோழர்லோகேந்திரராஜா கூறியதை அப்படியேதருகிறோம். "தலைமையின் கட்டளை என்ற பெயரில் கண்மூடித்தனமாக இந்த தோழரை(கிருபாகரனை) கைதுசெய்கின்றீர்களே இவர் PLOT வளர்ச்சிக்காக ஆற்றிய சேவை உங்களுக்கு தெரியும்தானே. அப்படியிருந்தும் உங்கள் செயல் எவ்வளவு ஈனமானது என்று தெரியவில்லையா? நாளை இதே தலைமை உங்களையும் கைதுசெய்யும்படி கேட்கும்போதுதான் துடித்தெழப் போகின்றீர்களா? சக தோழனுக்கு நடக்கும் அநீதிகளுக்குதுணை நிற்கும் நீங்கள் தான் தமிழ் மக்களுக்கு நிகழும் அநீதிகளுக்காகப் போராடுபவர்களா? இந்த அநீதிகளைக் கேட்க நெஞ்சுரம் இல்லாத நீங்களா தமிழ் மக்களின் விமோசனத்திற்கு வழிகாட்டும்போராளிகள்"

தோழர் லோகேந்திரராஜாவின் இந்த வார்த்தைகளை தமிழ்மக்கள்சார்பில் நாமும் கேட்கின்றோம்.

## அவள் கொல்லப்படவில்லை

மே, 85 தீப்பொறியின் 10ம் பக்கத்தில் வெளியாகியிருந்த உமாமகேஸ்வரனுக்கான பகிரங்கக் கடிதத்தில் "கழகத் தோழிகளை பலாத்காரம் புரிந்து கொலை செய்த கயவர்களை ஏன் காப்பாற்றிவைத்திருக்கின்றீர்கள்"என்றவரியில் "கொலைசெய்த" என்று தெரிவித்திருப்பது பிழை என PLOTஇன் தமிழீழ நிர்வாகப் பொறுப்பாளர் தீப்பொறிக்கு சுட்டிக்காட்டியிருந்தார். தவறை ஏற்றுக்கொள்கிறோம். தவறுக்காக மனம் வருந்துகிறோம்.-

—ஆசிரியர் குழு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால்....

**மார்ச் 17, 85 அன்று கிழக்கு மாகாணத்தில் உள்ள மூதூர் கிராமத்தில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மகளிர் அமைப்பைச்சேர்ந்த தோழி ஒருவர் PLOT உளவுப்படையினரால் ஆயுதமுனையில் கைதுசெய்யப்பட்டார். இவர் விசாரணையெதுவுமின்றி பின்னர் விடுவிக்கப்பட்டார் இவர் PLOTன் உளவுப் படையினரால் கைது செய்யப்பட்டது குறித்து PLOTன் மகளிர் அமைப்பு இன்றுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்காது மௌனம் சாதித்துள்ளது.**

அன்பான தோழி!

நினைவிருக்கிறதாஎன்னை. ஒரு வருடத்திற்கு முன்பு நீதான் எனக்கு விடுதலைஉணர்வு ஊட்டினாய். இன விடுதலைக்கு மாத்திரம் போராடினால் போதாது. கூடவே சமதர்ம ஆட்சிக்காகவும் போராடவேண்டு மென்றாய். பெண் அடிமைத்தனத்தின்துயரத்தை அதன் கொடூரத்தை உன் சொல்லாட்சிமிக்க பேச்சினால் அழகாக அம்பலப்படுத்தினாய். பெண் அடிமைத்தனத்திலிருந்து மீட்சி பெறுவதற்கு இனவிடுதலையின் வெற்றி மாத்திரம் போதாது. அதற்குமப்பால் ஓர் ஆழமான பார்வை வேண்டுமென்றாய். சமதர்ம ஆட்சியிலேயே பெண்களின்உரிமைக்கு உத்தரவாதம் கிடைக்கும். அவர்கள் அப்பொழுதுதான் விமோசனம் காண்பார்கள் என்ற உன் தெளிவான விளக்கத்தால் என்னை ஆகர்சித்தாய்.

அன்றே என் வாழ்வு அர்த்தம் உள்ளதாக மிளிர வேண்டும் என்று முடிவு கட்டினேன். உன்னோடு கைகோர்த்து ஓர் இலட்சிய வாழ்வுக்கு என்னை அர்ப்பணிக்க திடம் கொண்டேன். உனக்குநன்றாக நினைவிருக்கும். நான்வீட்டிலிருந்து புறப்பட்ட வேளை என் தாய் சிந்திய கண்ணீரை தகப்பன் இல்லாத பிள்ளை என்று விம்மியழுத போது அந்தக் கண்ணீர் என் உறுதியைக் குலைக்கப் பார்த்தது. என் தம்பி தங்கைகள் கூட என் கைகளை அள்ளிக் கொண்டு கண்கள் கலங்கஅதிர்ந்து போய் பொங்கிப் பொருமும் போது நான் கலங்கிப் போனேன். அந்தப் பாசப்பிணைப்பை அவ்வளவு சுலபமாக உதறி எறிந்து விட்டு வரமுடியாமல் நான் தயங்கித் தடுமாறினேன். நீதான் எனக்கு அப்பொழுது உதவினாய்.

''யுகம் யுகமாக ஏற்பட்டு வரும் எங்கள் அவல வாழ்வை வேரறுகக வீட்டில் இருந்து முடைந்து வேலை இல்லை'' என்றாய். ''சமூகம் நான்கு சுவர்களுக்கு அப்பால்தான் இருக்கிறது. இன விடுதலைக்காக பெண்கள் போராடாமல் எதுவும் சாத்தியமில்லை''. உன் ஆணித்தரமான பேச்சில் பரவசமான அவர்கள், பெருமையோடு என்னை வழியனுப்பி வைத்தார்கள். அப்பொழுது நீ என் தாயின் கரம்பற்றிபாசமுடன் கூறியதுஇப்பொழுதும் என் காதுகளில் ரீங்காரமிடுகிறது.

''நான் கூட அப்பாவின் பாசத்தை சிறுவயதிலே இழந்தவள்தான். உங்கள் மகளை என் கூடப்பிறந்த சகோதரி போல என்றும் காப்பேன்''.

அம்மாவிடம் நீ கொடுத்த வாக்குறுதியை எண்ணி அன்று நான் ஆனந்தக் கண்ணீர் சிந்தினேன். குடும்பத்திற்குவெளியே ஒரு பாசப் பிணைப்பு ஏற்படும்போது எல்லோருக்கும் ஏற்படும் அதே பெருமிதம் என் மனதையும் கௌவிப்பிடித்தது.

அந்த நாட்கள்தான் எவ்வளவு இனிமையானவை! நகரத்தின் கொல்லைப் புறமாக விளங்கும் எல்லா சேரிகளுக்கும் நாம் ஏறி இறங்கினோம். எங்கள் கால்களின் பரிதாபம் தாங்காமல் சைக்கிள் பழுதடையும் வேளையில் தான் எமக்கு ஓய்வு கிட்டும். அதுவரை ஓட்டம், ஒரேவேகம் ஆமாம்; இன விடுதலையும் பெண் விடுதலையும் ஒன்றோடொன்று போட்டி போட்டு முன்னேறிச் செல்லும் அசுர வேகத்தில் நாம் உழைத்தோம்.

பெண்கள் மாத்திரமல்ல ஆண்கள் முதியவர்களைக்கூட எங்கள்கருத்துக்கள்பற்றிக்கொண்டன. எங்கள் கடும் உழைப்பினால் அவர்களை மாற்றினோம். அவர்களுக்கு விழிப்புணர்வையூட்டினோம்,அமைப்புகளாக உருவாக்கினோம். அந்த நாட்கள் உண்மையில் மகிழ்ச்சிகரமானதுதான்.

சமூக மாற்றம் என்று புறப்பட்டுவிட்ட எங்களை அரவணைக்க எத்தனை கரங்கள்! பரிவு காட்ட எத்தனை முகங்கள்!

கிராமம் கிராமமாகத் திரிந்தோம். ஒதுக்கப்பட்ட கிராமங்களில் எல்லாம் எழுச்சி கொண்ட மக்களைத் தரிசித்தோம். கிராமங்களை விட்டு நகரங்களுக்கு மாறினோம். இறுதியில் அந்த மாவட்டத்தை விட்டு வெளிமாவட்டம் செல்வதென்று முடிவு செய்தோம். கிழக்குமாகாணத்தின் அந்த நெல்வயல் நிறைந்த செழிப்பான மண்ணிற்கு போகும்படி அழைப்பு வந்தது நான் தனியாகப் புறப்படத் தயாரானேன். நீ என் கரம் பற்றி பாசமுடன்விடைகொடுத்தாய்.

நாம் எங்கு வாழ்ந்தால் என்ன! எமது இலட்சியம் ஒன்றே! எமதுபணி ஒன்றே! எமது அர்ப்பணிப்பும் ஒன்றே! அதுவே எம் நெருங்கிய பிணைப்பென்று வழியனுப்பி வைத்தாய். புதிய கிராமம் அன்பாக என்னை வரவேற்றது. அங்கும் மனிதர்கள் தான். ஒடுக்கப்பட்ட சுரண்டப்பட்ட மக்கள் தான்; உரிமை வாழ்விற்காகஜீவனை அர்ப்பணிக்க துடிக்கும் மக்கள் தான்; அவர்களுக்கு எனது சேவை அவசியமாகத் தேவைப்பட்டது, சிறிலங்கா இராணுவத்தின் அக்கிரமங்களுக்கும் துரோகிகளின் காட்டிக்கொடுப்புக்கும் மத்தியில் எம் பணியைத் தொடர்ந்தோம். அந்த வேளையில் ஒரு நாள் நான் கைதாகினேன்.

தோழி!

நான் கைதுசெய்யப்பட்டேன். சிறிலங்கா இராணுவம் என்னைக் கைது செய்யவில்லை. கழகஉளவுப்படையே இந்த கைங்காரியத்தை செய்தது. அவர்கள் இரவிலே வந்தார்கள். ஆயுதங்களைக் கையில் ஏந்தி ஒரு எதிரியை முகம் கொடுப்பது போல அவர்கள் என்னை வன்மமாக முறைத்தார்கள். ஒரு கள்வனைப்பிடிப்பது போல என்னைக் கைது செய்தார்கள். என் கரங்களை கட்டிப்போட்டார்கள்.

''இது ஏன்'' என்றேன்.

''பெரியய்யாவின் கட்டளை'' என்றார்கள்.

''நான் என்ன பிழை செய்தேன்'' என்றேன்.

''விசாரணையில் தெரியும்'' என்றார்கள்.

நான் திமிற வில்லை. கதறவில்லை. ஒரு சொட்டு கண்ணீர் மட்டும் என்னையும் மீறி வந்தது.

இந்த இழிநிலை எனக்கு வந்ததைஎண்ணிஎனக்குள்ளே குமைந்தேன், அதனைக் காட்டிலும் கழகத்திற்குள் இந்த அட்டூழியமும்அராஜகமும் எப்படி வந்தது என்று தெரியாமல் குழம்பினேன். கழக ஊழியர்களுள் நானும் ஒருவர். கழக வளர்ச்சிக்காக என்னை அர்ப்பணித்தவள். என் சொந்தசுகங்களைக்கூட விடுதலைக்காகபலியிட்டவள். என் மீது பிழை இருந்தால் கழகம அதை சுட்டிக்காடடட்டும். விசாரிக்கட்டும். பிழை இருந்தால் தண்டிக்கட்டும். ஆனால் விசாரணைக்கு முன்பே குற்றம் என்னவென்று கூறாமலே அவமதிக்க வேண்டியதில்லையே! விசாரணை என்றால் அதில் ஒரு ஒழுங்கு கண்ணியம் இருக்க வேண்டாமா? எதிரியைத் தண்டிப்பதிலும் மனிதாபிமானம் காட்ட வேண்டும். என்று கூறும் கழகம் சகதோழர்களை இப்படி கேவலமாக அவமதிக்க வேண்டுமா? நாயை கட்டி இழுத்துச் செல்வது போல மிருகத்தனமாக அவமானப் படுத்தினார்கள். வேதனை! வெட்கம்!

எனக்குமாத்திரமல்ல. கழகத்திற்கும்தான். பெண்விடுதலை, மனித உரிமைகள் பற்றி சிந்திப்பவர்கள் அனைவருக்கும் தான்.

கழகத்திற்குள் அநாகரிகமான சிலரின் அட்டகாசங்கள் அரங்கேறுகின்றன, அதனால்தான் இந்த அவலட்சணங்கள் என்று எனக்குள் கொதித்தேன். ஆனாலும் வாய் திறந்து பேசவில்லை. நடப்பதை அதன் போக்கிற்கே விட்டேன். நான் பேசுவதற்கும் ஒரு இடம் இருக்கிறது. எனக்காக பேசுவதற்கும் ஆட்கள் இருக்கிறார்கள். அந்தத் தெம்பில் அமைதியானேன். ஆனால் அது கூட என்னமாய் மறைந்து விட்டது. கழகத்தின் அராஜகப் போக்கில் அதிருப்தி கண்டு விலகிப் போனவர்களால் தம் உண்மைச்சொரூபம்அம்பலமாகி விடும் என்ற அச்சத்தில் அந்த அராஜகவாதிகள் என்னமாய் கழகத்தை ஆட்டிப் படைத்தார்கள். என் போல வேறுபல கழகத் தோழர்களையும்கடத்திச் சென்று விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்து துன்புறுத்திய வேதனையான செய்தியை அறிந்ததும் அதிர்ச்சியடைந்தேன்.

விசாரணை என்று கொண்டு வந்தார்கள். அதன் பின் என்னவாயிற்று!

யாருமே என்னை ஏன் இந்த அவலம்என்று கேட்கவில்லை. என்னோடு பேசினால் தம்மீது பழியும்பாவமும்குவிந்து விடும் என்று பயந்து விலகுவோரையும், தம்மையும்சந்தேகக் கண் கொண்டு துன் புறுத்துவார்கள் என்று அஞ்சி நடுங்கும தோழர்களையும் தான் கழகத்தில் கண்டேன். சகலஅடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம் என்று புறப்பட்டவர்கள் இப்படிகூனிக்குறுகி நின்ற கோலம் பரிதாபமாகத்தான் இருந்தது

என் துயரத்தையும், கழகத்தின் அவலத்தையும் கூறி தேறுதல் அடையலாம் என்று உன்னைத தேடினேன். நீயோ பரபரத்துதிரிந்தாய். உனக்கு இப்போதுஅவசரமானவேலைகள் ஏராளம், கழகத்திலிருந்து வெளியேறியவர்கள் பதவியைப் பிடித்துக்கொள்ள நடந்த போட்டா போட்டியில் நீ முந்த வேண்டும் என்பதுதான உனது ஆதங்கம். இந்த பதவிப் போட்டிக்காக இறந்யாபறந்த தோழியவர வெல்ல முடியுமா என்பதுதான் உன் இப்போதைய கவலை.

கழகத்தின் கடும் உழைப்பாளி நீ என்று காட்ட வேண்டும். அதற்கு சாட்சி சொல்ல மக்கள் இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கை உனக்கு இப்போது இல்லை. அதனால் கழகத்தின் விசுவாசி நீ என்று காட்டிக்கொள்ளமுடிந்ததெல்லாம் செய்கிறாய். வெளியேறியவர்கள்மீது கழகம் சுமத்திய அவதூறுகளுக்கெல்லாம் நீயும் துணைபோனாய். உன் பிரச்சனைகள் உன்னோடு. என்னைப் பற்றி சிந்திக்க உனக்கு இப்போது நேரம் இல்லை.

ஒரு அசிங்கப் பிராணியைப் பார்ப்பது போல என்னைப் பார்வையாலேயே வெறுத்து ஒதுக்கினாய். ''உன்மீது விசாரணை இருக்கிறது. அதுவரை வவுனியா போ'' என்று உன் அதிகாரத்தை பறைசாற்றினாய். ஆத்மாவை இழந்து பதவி வெறி பிடித்து பேய்ப் போல நெளியும் உன்னால் இதைவிடவேறு எதைச்சொல்ல முடியும். அதிகார மமதையும் ஆணவமும் உன்னை இவ்வளவு சுலபமாகப் பற்றிக் கொள்ளும் என்று நான் எதிர் பார்க்கவில்லை.

கழகத்தின் தோழி காரணம் இன்றி அவமதிக்கப்பட்டாளே உன்னோடு கைகோர்த்து விடுதலை போராட்டத்தில் பங்கேற்றவள் கேட்பாரற்று அலைக் கழிக்கப்படுகின்றாளே; இது பற்றி எல்லாம் உனக்கு அக்கறை யில்லை. என்னைக் கைது செய்ததற்கு இதுவரை யாருமே எனக்கு காரணம் சொல்லவில்லை. பெண் என்றால் அவளை எதுவும் செய்யலாம். அவளுக்காக கேள்வி கேட்க, நியாயம் கூற யாரும் வர மாட்டார்கள்என்ற பரம்பரை உலகவழக்கினை கழக மகளிர் அமைப்பும் ஒப்புக்கொள்கின்றதோ? பெண்உரிமைபற்றிபரபரத்துப் பேசிய கழகம் இப்போது சாதிக்கும் மௌனத்திற்கு அர்த்தம் என்ன?

மனித உரிமை; பெண் உரிமை எல்லாம் உன் பதவிப் போட்டிக்கும் ஆணவத்திற்கும்முன்னால் தூள் தூளாகிக் கிடக்கிறதே

ஆத்மாவை இழந்து விட்ட ஜீவன் நீ. மனச்சாட்சியை விற்ற கூட்டத்தில் நீயும் ஒருத்தி. அதனால்தான் உன்னால் இப்போதும்மகிழ்ச்சியாகவும், கலகலப்பாகவும் சிரிக்க முடிகிறது. கழகத்தில் சதிராட்டம் போடும் சதிகாரக்கூட்டம்நடத்தும் மக்கள் விரோத நடவடிக்கைகளை கண்டுகொள்ள உனக்கு மனம் இல்லை. கண்டு கொண்டாலும் கண்டிக்கத் துணிவு இல்லை. கழக உளவுப்படையினர் செய்யும் அடாவடித்தனங்கள், பொதுமக்களுக்குச் செய்யும் இம்சைகள் எல்லாம் இப்பொழுது உனக்கு சாதாரணமாகி விட்டது.

பழி, பாவம், நியாயம் அநியாயம் எதுவும் தெரியாத ஜடமாகிவிட்டாய். கழக மகளிர் அமைப்பு தோழிமீது பலாத்காரம் புரியப்பட்ட செய்தி கேட்டதும் அது கழகத்திலிருந்து வெளியேறியவர்களின் வேலை என்று ஆர்பரித்துக் கூறினாய். இந்த அவதூறை உண்மையாக்க பரபரத்துத் துடித்தாய், சித்திரவதை மூலம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அந்தப் பழியை வெளியேறியவர்கள் தலையில் சுமத்த நடத்த கொடூரத்திற்கு நீயும் ஆதரவு காட்டினாய். கழகத்தில் அராஜக வெறியாட்டத்திற்கெல்லாம் வெளியேறியவர்கள் தான் காரணம் என்று பரப்பப்பட்ட அவதூறுகளை நிஜமாக்க நீயும் துடித்தாய்.

(10ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமூகச் சீரழிவுகளை சக்தி நியாயப்படுத்துகின்றதா?

அண்மைக் காலங்களில் பெண் விடுதலை பற்றிய பல கருத்துக்கள் வெளிவருவதிலிருந்து, பெண் விடுதலை பற்றிய உணர்வுபூர்வமான பிரதிபலிப்புகள் ஏற்படுவதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கிறது. இந்த வகையிலே ஏப்ரல் இல் வெளிவந்த ''சக்தி'' என்ற சஞ்சிகையும் அமைந்திருந்தது. இன்றைய சூழ்நிலைகளில் சக்தியைப் போன்ற சஞ்சிகைகளின் தேவை மிகவும் முக்கியமானதாகும். சக்தி ஏப்ரல் இதழில் பெண்விடுதலை தொடர்பாக சில அனுபவக் குறிப்புகள் எனும் பகுதியில் வெளியான 'விபச்சாரம்' பற்றிய சில கருத்துக்கள் குறித்து சில விடயங்களைத் தெரிவிப்பது அவசியமெனக் கருதுகின்றோம். 'விபசாரம்' குறித்து அங்கு தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:—

''விபச்சாரம் - ஒரு சீரழிந்த வாழ்முறை என்பதில் எனக்கு துரும்பளவும் சந்தேகம் இல்லை, ஆனால் ஒரு பெண் விபச்சாரம் செய்ய வருவதற்கான காரணங்கள் என்ன என்பதை நாம் அவதானிக்க வேண்டும். இந்தச் சமூகக் கட்டமைப்பில் கீழ் வாழமுடியாது வேறுவழியின்றி விபச்சாரம் செய்கின்ற பெண்களைப் பார்த்து சமூகவிரோதி என்று அழைக்க இந்த சமூகத்திற்கு எந்த விதமான உரிமையும் கிடையாது. அவளை வாழவைக்க முடியாத இந்த சமூக அமைப்பிற்கு அவளைக் குற்றம் சாட்ட மட்டும் எப்படி முடியும்.''

''இந்த சமூக அமைப்பை எதிர்ப்பவர்கள் சமூகவிரோதிகள் என்றால் எல்லா புரட்சிக்காரர்களும் சமூகவிரோதிகளே. போன்ற கருத்துக்களுடன் பெரிதும் உடன்படுகிறோம் என்றபோதும்இதில கூறப்பட்ட சர்ச்சைக்குரிய கருத்துக்களை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இந்த சமூக கட்டமைப்புகளையும் அதன் கலாச்சார வடிவங்களையும் தூக்கி எறிந்து விட்டு அவைகளை எதிர்கொண்டு வீதியில் இறங்கிவிட்ட அவளை (விபச்சாரியை) நாம் பாராட்ட வேண்டும். இந்தச் சமூக அமைப்பையும் அதன் அதிகார கலாசாரத்தையும் எதிர்க்கத் துணிந்துதான் அவற்றின் கோரமுகங்கள்மீது காறி உமிழ்ந்தபடிதான் வீதியில் இறங்கினாள்.''

இந்தக் கருத்துப்படி பார்த்தால் இந்த சமூக அமைப்பை அதன் கலாசார வடிவங்களை எதிர்ப்பவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள் என்று கருதலாமா? இந்த சமூக அமைப்பில் சட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் புரட்சியாளர்கள் மட்டுமன்றி உதிரிப்பாட்டாளிகளுந்தான் மீறுகின்றனர், இந்த உதிரிப்பாட்டாளிகளே பெரும்பாலும் புரட்சிக்கு மாறாக அதிகார வர்க்கத்தின் கூலியாட்களாகவும் பயன்படுவார்கள். ஆகவே சமூகத்தில் சட்டங்களையும் கலாச்சாரங்களையும் தூக்கி யெறிவது மட்டுமே புரட்சிகர அம்சமாக மாட்டாது. இந்த நிலைமையில் புரட்சியாளர்களையும் உதிரிப்பாட்டாளிகளையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்.

விபச்சாரி என்பவள் உதிரிப்பாட்டாளி வர்க்கத்தையே சார்ந்தவள். அவள் ஒடுக்கப்பட்டவள் என்ற வகையில் அனுதாபத்துடன் அணுகப்படவேண்டியவள் என்பது வேறு விடயம். அதற்காகப் பாராட்டப்பட வேண்டும் என்று கூறும்போது இது ஒரு அதி தீவிரவாதப் போக்கேயாகும்.

''நேருக்கு நேர் பார்த்து தயக்கமில்லாத ஒரு விடுதலை பெற்ற உணர்வுடன் உள்ள பெண்களை யாழ்ப்பாணத்தில் காணவேண்டுமானால் விபச்சாரிகளைச் சந்தித்து பார்க்கலாம்'' என்று கூறியிருப்பதை பார்ப்போம் வாழ்க்கையை சமூகத்தில் அனைத்து சீரழிவுகளுக்கூடாகவும் தரிசித்து (விட்ட ஒருவர் சமூகம் பற்றி போலித்தனமான கௌரவங்களைத் தூக்கியெறிந்து விடுகிறார். சமூக அந்தஸ்து, கௌரவங்கள் என்பனவற்றின் பின்னால் மறைந்துள்ள சில அசிங்கங்களைத் தரிசித்து விட்ட அவர் அவற்றை ஏளனமாகப் பார்ப்பது சமூக அநீதிகட்கு எதிராகப் போராடுவது என்பதும் ஒன்றல்ல.

''இவர்களுடைய மோசமான நிலைஇந்தசமூக அமைப்பால் இவர்களுக்கு திணிக்கப்பட்டஒன்றேயன்றிவேறல்ல'' என்ற வாதம் நியாயமானதே. சமூக அநீதிக்குப் பலியாகிப் போவதும், அதற்கு எதிராகப் போராடுவதும் முற்றிலும் வேறுபட்ட அம்சங்கள். முதலாவது வகை அனுதாபத்திற்குரியது. இரண்டாவது வகை புரட்சிகரத்தன்மையானது. இந்த அடிப்படையில் பார்க்கும் போது விபச்சாரியை ''கிளர்ச்சிக்காரிக்குரிய மரியாதையுடன் அணுக வேண்டும்'' எனக் குறிப்பிடுவது மிகைப் படுத்தப்பட்ட பார்வையே.

அடுத்த விடயம் ''விபச்சாரியை ஒரு TRIBEL என்று தான் சொன்னேனே] தவிர அவள் புரட்சிக்காரி அல்ல'' என்று கூறியிருப்பது இங்கு ஒன்றை அவதானிக்கத்தவறிவிட்டதாகவேகருதுகிறோம். விபச்சாரிக்கும் புரட்சிக்காரிக்கும் பொதுவான மிக அடிப்படையான குணாம்சம் போராட்டக் குணாம்சமே. ஆனால் சீரழிவு என்பது மறுநாமாணத்துடன் தொடர்புடையதல்ல. விபச்சாரியும் ஒரு TRIBELஎன்றால் 'சக்தி'யின் பார்வையில் கொள்ளைக்காரர்கள், லஞ்சம் வாங்குபவர்கள், மோசக்காரர்கள் எல்லாம் TRIBEL ஆகிவிடுவார்களோ என்னவோ!

இன்றைய சமூகத்தில் விபச்சாரம் பற்றிய கண்ணோட்டங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பது உண்மையே. பல பெண்களை வைத்து இதனைத் தொழிலாக நடத்துபவர்கள் பெரிய மனிதர்களாக உலாவி வரும் போது இதில் ஈடுபடும் ஆண்கள் சுதந்திரமாகத் திரியும் போதும், இன்றைய சமூகத்தில் இதில் சிக்கிச் சீரழிந்த பெண்களை மீண்டும் நிணடிப்பது என்பது கண்டிக்கப்பட வேண்டியதே. அவர்களை அனுதாபத்துடன் அணுகி இந்தச்சீரழிவிலிருந்து விடுதலை பெற உதவுவது ஒவ்வொரு புரட்சியாளரினதும் கடமையாகும். ஒரு சமூகமாற்றத்தினூடாகவே இந்தக் கடமை பூர்த்தியடைய முடியும்.

அதே சமயம் விபச்சாரியின் பாலுள்ள 'நியாயங்களை' எடுத்துக்காட்டுவதாகக் கூறிக்கொண்டுஅவர்களை TRIBEL என்னும் கிளர்ச்சிக்காரி எனவும் பாராட்டுவது அபத்தமானது. இது விபச்சாரியின் பாலுள்ள சமூக அபிப்பிராயங்களை மாற்றுவதற்குப் பதில் விபசாரம் பற்றிய புனிதத் தன்மையைக் கொடுக்க முயலவதேயாகும். சமூக அநீதிகளைக் கண்டிக்கும் போது நாம் எப்போதும் மிகச் சரியான அம்சங்களை முன்னெடுக்கவேண்டுமேயல்லாது அந்த சமூகஅநீதிகளை எதிர்க்கும் சீரழிவுகளை நியாயப்படுத்தும் அளவிற்குச் சென்றுவிடக்கூடாது.

''விருப்பமில்லாத கணவனால் பலாத்காரமாகக் கொடுக்கப்படும் முத்தத்தைவிட, தெருமுனையில் கள்ளக் காதலனை சந்தித்து ரகசியமாக பரிமாறிக் கொள்ளும் முத்தங்கள் உயர்வானவை'' என்று லெஸ்லி அம்மையார் எழுதியதற்கு பதிலளிக்கையில் லெனின், விருப்பமில்லாத கணவனால் பலாத்காரமாகக் கொடுக்கப்படும் முத்தம் என்பது மோசமானதுதான். ஆனால் அதற்கு தெருமுனையில் கள்ளக் காதலனை சந்தித்து ரகசியமாகப் பரிமாறுக் கொள்ளும் முத்தத்தையா அத்துடன் ஒப்பிடுவது? ஏன் காதலர்கள் அன்புடன் பரிமாறும் முத்தங்களை குறிப்பிடவில்லை'' என்றார்.

இந்தக் கருத்துப் போக்கின் அடிப்படையில், விபச்சாரத்தை ஒரு தொழிலாக அங்கீகரிக்க வேண்டும், அவர்களை ஒரு தொழிற் சங்கங்களாக திரட்ட வேண்டும் என்ற சில ஐரோப்பிய புரட்சிகர இயக்கங்களின் நிலைப்பாட்டை லெனின் கண்டித்திருந்தார். இவ்வாறே பெண்ணடிமை

(10ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா அரசின் மற்றுமொரு சிண்டு முடிதல்

கடந்த மே 04ம் திகதி சிறிலங்கா வானொலியும் சிறிலங்கா அரச சார்பு பத்திரிகைகளும் தமிழ்நாட்டில் கடலூர் என்னுமிடத்தில் இலங்கை அகதிகளுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்குமிடையே கலவரம் நடந்ததாக ஒரு செய்தியை வெளியிட்டு இங்குள்ள தமிழ் மக்களிடம் தமிழக மக்கள் பற்றிய ஒரு தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்த முயன்றார்கள். கடலூர் என்னுமிடத்தில் உண்மையில் நடந்த சம்பவம் வருமாறு:-

இராமேஸ்வரத்திலுள்ளமண்டபம் இலங்கைஅகதிகள்முகாமில் தங்கியிருந்த 48 குடும்பங்களுக்கு தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கடலூர் என்னும் நகரில் அரவிந்த ஆச்சிரமத்திற்கு சொந்தமான 'மதர் எக்ஸ்போட்ஸ்' என்னும் தலைவிரிப்புகளை உற்பத்தி செய்யும் தானிய நிறுவனத்தில் வேலைகிடைத்தது. இவர்கள் கடலூர் சிறைச்சாலையிலிருந்து சற்றுத் தொலைவில் ஒதுக்குப் புறமான இடத்தில் குடியமர்த்தப்பட்டனர்.

அரச நூற்பாலை ஒன்றில் குடும்பத்தில் எல்லோருக்கும் வேலை என வாக்குறுதியளிக்கப்பட்டு கூட்டிவரப்பட்டவர்களுக்கு மதர் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனம் குடும்பத்தில் ஒருவருக்கே வேலை வழங்கியது. அத்துடன் ஆடி மாதம் வரை அரைச் சம்பளமே கொடுத்தது. அத்துடன் போனஸ், வருங்கால வைப்புநிதி போன்ற வசதிகளும் கொடுபடவில்லை ஏற்கனவே வாக்குறுதியளிக்கப்பட்டபடி சம்பள முற்பணம், குடியிருப்புக்கான குடிதண்ணீர்] வசதிவிறகு வசதி, குழந்தைகளுக்கு பள்ளிக்கூட வசதி போன்றனவும் வழங்கப்படவில்லை. அவர்களை ஒரு தொழிற் சங்கமாக அணிதிரட்ட முயன்ற முருகையன் நாயப்பர் ஆகிய தொழிலாளர்களும் வேலை நீக்கஞ்செய்யப்பட்டனர். மைக்கல் என்ற தொழிலாளி தாக்கப்பட்டார். அவரின் மகள் மீது நிறுவனத்தின் மேற்பார்வையாளர் பலாத்காரம்புரிந்தார். இந்த நடவடிக்கைகளைக் கண்டித்து அனைவரும் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். திருப்பாபுலியூர் பொலிஸ் நிலையம், கடலூர் கலெக்டர் முதல் தலைமைச் செயலாளர் ,வரை மனுக்கள் அனுப்பினர்.

கடந்த மே முதல் தேதி தொழிலாளர்கள் கூட்டம் ஒன்றினை நடாத்தினர். இக்கூட்டத்தில் தம்மீதான தாக்குதல்கள் குறித்தும் தமக்கு இழைக்கப்பட்ட அக்கிரமங்களை, அநியாயங்களை அம்பலப்படுத்தியும்பேசினர். இதன் விளைவாக நிறுவன மனேஜர் கிருஷ்ணசாமி தம் கையாட்களைக் கொண்டு இவர்கள் மீது தாக்குதல் நடாத்தினார். குடியிருப்புக்கு தீவைப்பித்தார். தொழிலாளரின் ஓரிரு உடைமைகளும் கூட தீக்கிரையாகின.

நடந்தது இவ்வாறாக இருக்க சிறிலங்கா அரச தமிழீழ - தமிழக பாட்டாளி மக்களுக்கிடையேயான நல்லுறவிற்கு பாதகம் ஏற்படுத்தும் முகமாக தவறான பிரச்சாரங்களை மேற்கொண்டுள்ளது. சிறிலங்கா அரசின் இத்தகைய சிண்டு முடிதல் குறித்து தமிழ் மக்கள் மிகவும் எச்சரிக்கையாகவும் அவதானமாகவும் இருக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப்போராட்டத்திற்கு ஊறு விளைவிக்கும் உதிரிகள்

இழப்பதற்கேதுமில்லாத பாட்டாளிவர்க்கமே புரட்சிகரமானது. சமூக மாற்றத்திற்கு அந்தவர்க்கமே ஆதாரமானது என்று மார்க்சிசம் கற்பிக்கின்றது. தேசிய விடுதலையை, சோசலிசபுரட்சியை வெற்றிகரமாக நடத்திமுடித்தகட்சிகள் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரத் தன்மைகளை சுவிகாரம் செய்து கொண்டதனாலேயே தமது இலட்சியத்தில் வெற்றி காண முடிந்தது.

தனியுடமையில் சுரண்டல் கொடுமையிலிருந்து விடுதலை பெறுவலன்றி வேறெந்த வகையிலும் விமோசனம் காண முடியாதென்ற நிலைக்குத் தள்ளப்பட்டதான் பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ சமூகத்தை மாற்றியமைப்பதற்கு போர்க்குணமிக்க புரட்சிகர சக்தியாக தன்னைப் பிரகடனப் படுத்துகின்றது. உழைப்பைத் தவிர வேறெதையும் கொண்டிராத பாட்டாளி வர்க்கம் உழைப்பை விற்று கூலியைப் பெறுவது அதன் புரட்சிகரத் தன்மையின் தோற்றுவாயாக விளங்குகின்றது.

ஆனாலும் உழைக்கும் மக்கள் அனைவரும், கஷ்டமான வாழ்க்கையை அனுபவிக்கும் அனைவரும் புரட்சிகர சக்திகளாக கருதப்படமாட்டார்கள். ஏனென்றால் பாட்டாளி வர்க்கம் போல் பாவனை காட்டும் உதிரிப்பாட்டாளிகளின் எதிர் புரட்சிகர தன்மைகள் குறித்தும் மார்க்சிசம் எச்சரிக்கின்றது. அதாவது இவ் உதிரிப் பாட்டாளிகள் சரியாக வழிநடாத்தப் படாவிட்டால் எதிர்ப் புரட்சிகர சக்திகளாக இயங்குவார்கள்.

இன்றைய தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும்இந்தஎதிர் புரட்சிகர சக்திகளை உடனடியாக இனம் கண்டு போராட வேண்டிய தேவை முன்னெப்பொழுதையும் விட மிக அவசியமானதாக இப்பொழுது தமிழ் மக்களுக்கு உருவாகியுள்ளதுLUMPENஎன்றசொல்லின் தமிழாக்கமே உதிரி என்பதாகும். உதிரி என்பதற்கு பேச்சு தமிழில் ''பொறுக்கி'' ''விடுகாலி'', ''கழிசடை'' போன்ற பதங்களும் பொருத்தமானதாகும். உதிரிப்பாட்டாளிகள் முதலாளித்துவ சீரழிவுகளின் நயவில் அந்த சீரழிவுகளுக்கு வாகனமாக நின்று வாழ்க்கை நடாத்துபவர்களாகும். உதிரிப் பாட்டாளிகளும் உடல் உழைப்பில் வாழ்பவர்கள்தான்.அவர்களும் கூலியைதான் பெறுகின்றார்கள். ஆனால் அவர்கள் புரட்சிகரமானவர்கள் அல்ல. அதற்கு அவர்கள்உழைப்பை வழங்கும்விதத்திலும் வருமானம் பெறும் வகையிலும் உள்ள மோசமான தன்மைகளே காரணமாகும் இவர்கள் மற்ற அனைவரையும் விட மிகவும் நிச்சயமற்ற வாழ்க்கையை நடாத்துகின்றார்கள். எதையாவது 'பறித்துக் கொண்டு ஓடிவிட வேண்டும் என்ற ஒரே ஆசைதான் இவர்களுக்கு. பாட்டாளி வர்க்க ஐக்கியம் பற்றியோ சமூக மாற்றம் பற்றியோ இவர்களுக்கு அக்கறை கிடையாது. இவர்களது வாழ்நிலை இவர்களை சமூக சீரழிவுகளுக்கு ஆதாரமானவர்களாகவே கொண்டிருப்பதால் எதிர் புரட்சிகர தன்மை கொண்டவர்களாக ஆக்க நோக்கில்லாமல் அழிவு நோக்குடையவர்களாக விளங்குகின்றார்கள். நகரத்திலுள்ளவேலைவெட்டியில்லாமல் திரிபவர்கள், குறிப்பிட்ட எந்தவொரு தொழிலையும் செய்யாமல் ஊர் சுற்றித் திரிபவர்கள் போன்ற உதிரிப்பாட்டாளிகள் கூட்டு உழைப்பிலும் பொதுவுடமையிலும் நம்பிக்கையில்லாதவர்களாகும்.

தெருச்சண்டியன்கள், கப்பம் வாங்குபவர்கள், திருடர்கள் சூதாடிகள், கள்ளச்சாராயம் விற்பவர்கள், விபச்சாரிகள் கூட்டுக்குடுக்கிகள் போன்றவர்களும் சொத்துடமையில்லாதவர்களும் மிகமோசமான வறுமை நிலையில் வாழ்பவர்களும்தான். ஆனாலும் இவர்கள் புரட்சிகர சக்திகள் அல்ல. இவர்கள் உதிரிப்பாட்டாளி வகையினரேயாகும். நிலையான வேலையும் நிலையான வருமானமும் நிலையான வாழ்க்கையும் நல்ல பண்பாட்டு நிலைகளும் இல்லாமையே இவர்களின் பொதுஇயல்பு ஆகும். பாட்டாளி வர்க்கம் இந்த உதிரிப்பாட்டாளிகள் குறித்து மிகுந்த எச்சரிக்கையும் அக்கறையும் கொண்டுள்ளது. இவர்கள் பிரச்சனைகளை அனுதாபத்துடன் அணுகின்றது. ஆனால் அதன் எதிர் புரட்சிகர தன்மைகளையும் இனம் கண்டு விலக்குகிறது. இவர்களை மறுவார்ப்பு செய்வதன்மூலம், புரட்சிகர போராட்டத்தில் இவர்களையும் பங்காளிகளாக்க முடியும் என்று பாட்டாளி வர்க்கம் கருதுகின்றது. அப்படிச் செய்யத்தவறும் பட்சத்தில் இந்த உதிரிப் பாட்டாளிகள் பிற்போக்கு சதியின் கையூட்டுப் பெற்ற கருவிகளாக பணியாற்றுவார்கள்.

இந்த உதிரிப்பாட்டாளிகள் இன்று சிறிலங்கா அரசியலில் முக்கிய பாத்திரம் வகிப்பதை இனம் காண்பதிலிருந்து இவர்களால் வரக் கூடிய ஆபத்துக்களை சுலபமாக அறியலாம். இன்று சிறிலங்காவில் யு. என். பியின் ஆட்சிக்கு இந்த உதிரிப்பாட்டாளிகளே பல்வேறு வகையிலும் பக்கபலமாக இருக்கின்றார்கள். இவர்கள் யு. என். பி. அரசுக்கெதிராக முன்னெடுக்கப்படும் தொழிற்சங்கப் போராட்டங்களை, ஊர்வலங்களை, கூட்டங்களை முன்நின்று குழப்புவார்கள். பொதுமக்களால் குழப்பப்பட்டது என்ற போர்வையில் அப்பாவிப் பொதுமக்களாக காணப்படுபவர்கள் இந்த உதிரிகளே. இவர்களே தேர்தல் காலங்களில் யு.என்.பிக்காக வேண்டி காடைத்தனம் செய்து பொதுமக்களை சுதந்திரமாக வாக்களிக்க முடியாமல் தடுப்பவர்களும் யு. என். பிக்கு கள்ள வாக்குகளை அதிகளவில் சேகரித்துக் கொடுப்பவர்களுமாகும். யாராவது ஜனநாயகம். நீதி, நியாயத்தில் நம்பிக்கை கொண்டு வாதிட்டாலோ அவர்களை நையப் புடைத்து தாக்கி சில வேளைகளில் கொலைகள் கூடச் செய்து தம் அராஜக ரூபத்தை பறைசாற்ற எம்பிமாருக்கும், மந்திரிகளுக்கும் துணையாகவும் இவர்கள் இருப்பார்கள். இன்று சிறிலங்கா அரசின் எல்லா எம்பிக்கள், மந்திரிகள் பிரதமர், ஜனாதிபதி என அனைவரும் தமக்கென்று தனித்தனியாக இந்த உதிரிப்பாட்டாளிகளை அணிதிரட்டி வைத்திருக்கின்றார்கள். இந்தக் காடையர்களைப் பகைத்து அரசியல் நடத்துவதென்பது ஜனநாயக விரும்பிகளுக்கு முடியாததாகும். தமிழ்மக்களுக்கு எதிரான வன்செயல்கள் நாடெங்கும் அரசின் திட்டமிட்ட முறையில் நடப்பதற்கு இந்த உதிரிப்பாட்டாளிகள் தான் உதவுகின்றார்கள். இவர்கள் தான் அரசின் திட்டமிட்ட குழப்ப நடவடிக்கைகளை சரிவரச் செய்து முடிக்கப் பயன்படுத்தப் படுகின்றார்கள். தமிழ் மக்கள் மீதான சிங்களமக்களின் வன்செயல்களால் பரிணமித்த காடைத்தனங்களுக்கு முன்நின்று உழைத்தவர்கள் இந்த உதிரிப்பாட்டாளிகளே. இதற்கு உதாரணமாக சிறில்மைத்யூவின் குண்டர் படையின் முக்கிய தலைவர்களுள் ஒருவனாக கோணவல சுனில் என்பவனை குறிப்பிடலாம். இவன் பல கிரிமினல் குற்றச் செயல்களுக்காக பலதடவை சிறை சென்றவன். பாடசாலை மாணவி ஒருவர் மீது பலாத்காரம் புரிந்ததற்காக இவனுக்கு நீண்டகாலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனை வழங்கப்பட்ட சில நாட்களுக்குள்ளேயே இவனுக்கு ஜனாதிபதியால் ''மன்னிப்பு'' வழங்கப்பட்டு இவன் விடுதலைசெய்யப்பட்டான். ஜூலை 1983 கலவரத்தின் போது சிறையில் இருந்த தமிழ் அரசியற் கைதிகளை கொலை செய்யும் பொறுப்பு இவனிடமே கொடுக்கப்பட்டது. வெலிக்கடைச் சிறையிலிருந்த தனது சகாக்களின் உதவியுடன் அங்கிருந்த தமிழ் அரசியற் கைதிகளை இவன் கோரமாகக் கொலை செய்வித்தான். தற்போது இவன் அமைச்சர் ரனில் விக்கிரமசிங்கவின் குண்டர் படையில் முக்கிய தலைவனாக இருக்கின்றான்.

இத்தகைய பலர் யு.என். பி. தொழிற்சங்கங்களிலும் கட்சிகளிலும் கீழணி அங்கத்தவர்களாக இடம்பெற்றிருக்கின்றார்கள். அத்துடன் யு. என். பி. அரசு புதிதாக உருவாக்கிய ஊர்காவல் படைகளில் அங்கம் பெற்றிருப்பவர்களும் இந்த உதிரிகளே. இவர்கள் பொலிஸ் வழக்கு, எனஎதுவுமின்றி சுதந்திரமாக கப்பம் வாங்குதல், கள்ளச் சாராயம் விற்றல், வழிப்பறி போன்ற தமது தொழில்களைச் செய்வார்கள். மறுபுறம் அரசிற்கெதிரான புரட்சிகர சக்திகளை, விடுதலைப் போராளிகளை இனம்கண்டு அழிப்பதிலும் அரசாங்கத்துக்கு விசுவாசமாகச் சேவை செய்வார்கள். இன்று சிறிலங்காவின் உதிரிப் பாட்டாளிகள் தமிழீழ போராளிகளுக்கு மாத்திரமன்றி சிங்கள புரட்சிகரச் சக்திகளுக்கும்எதிராக இயங்கி வருகின்றார்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் இத்தகைய உதிரிகளின் எதிர்புரட்சிகர நடவடிக்கைகளை அண்மைக்காலத்தில் இனம்காணக் கூடியதாக இருக்கிறது. விடுதலைப் போராளிகள் மத்தியில் நிலவும் மக்கள் விரோத நடவடிக்கைகள், காடைத்தனம் என்பன இவற்றின் பிரதிபலிப்புக்களே. தமிழீழ விடுதலைப் போராட்ட அமைப்புக்களில் பணியாற்றும் போராளிகள் பெருமளவிற்கு இளைஞர்களும் மாணவர்களுமாக இருக்கின்றார்கள். இந்த விடுதலைப் போராளிகளில் பெரும்பாலானவர்கள் மத்தியதர வர்க்கத்தினராகும். தம் குடும்பங்களில் இருந்து தூண்டிக்கப்பட்ட இவர்கள் தம் வர்க்கப் பின்னணியை முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்தாமையால் இவர்கள் பற்றிய மதிப்பீட்டில் சிக்கல்கள்தோன்றுகின்றன. ஆயினும் இன்று மத்தியதர வர்க்கத்தின் அதிதீவிர சாகச செயல்பாடுகளை கணிசமாகக் கொண்ட உதிரிப்பாட்டாளிகளின் போக்குகளே தமிழீழ விடுதலைப் போராளிகள் மத்தியில் மேலோங்கி வருவது தெளிவு. இதன் வெளிப்பாடாகவே தமிழீழ விடுதலைப் போராளிகள் ஆயுதமுனையில் பொதுமக்களைப் பயமுறுத்துவது, சகஇயக்கத் தோழர்களையும், தமது இயக்கத் தோழர்களையும் துன்புறுத்தல், கொலை செய்தல் போன்ற சம்பவங்கள் சர்வசாதாரணமாக நடக்கின்றன. இவை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கும் சம்பவங்களல்ல. இந்த சம்பவங்களின் பின்னணியில் உள்ள உதிரித்தனத்தை இனம் காண்பது அவசியமாகும்.

''ஆயுதப் புரட்சி மூலமே விடுதலையை வென்றெடுக்க முடியும்'' ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமே ஒரே இலட்சியம்'' என்ற புரட்சிகர சுலோகங்கள் இந்த உதிரிகளிடத்தில் சிதைவு பட்டு மோசமான எதிர் புரட்சிகர நடவடிக்கைகளை தோற்றுவிக்கின்றன. இவர்கள் புரட்சிகர அரசியலைப் பற்றிப் பேசினாலும் நடைமுறையில் தோழர் என்ற பதத்தை கட்டோடு வெறுப்பார்கள். சக போராளிகளும் பொது மக்களும், தம்மை ''ஐயா'' ''சேர்'' ''பொஸ்'' என்று அழைக்க வேண்டும் என்று விரும்புவார்கள். இவர்கள் சகதோழர்களையே முகாம்களில் சித்திரவதை செய்வதில் இன்பம் காண்பார்கள், தம் இஷ்டம் போல மிலேச்சத்தனமான நடைமுறைகளை உருவாக்குவார்கள். சக இயக்கங்களின் சுவரொட்டிகளை கிழிப்பது, இயக்கத்தை விட்டு விலகும்தோழர்களை சித்திரவதை செய்வது, மொட்டையடித்து அவமானப் படுத்துவது, கொலை செய்வது போன்றவற்றை கூசாமல் செய்வதற்கு இந்தஉதிரிப்பாட்டாளி மனோபாவமே காரணமாகும். தெருச் சண்டித்தன போக்கெல்லாம் இவர்களைப் பொறுத்தவரை புரட்சிகரமானது என்று கருதுவார்கள்.

இவர்களைப்பொறுத்தவரை தம்தலைவர்களைத் துதிபாடுவதும்,தலைவர்களுக்குபிடித்தமில்லாதவர்களைப் பற்றிஅவதூறு பரப்புவதும் இவர்களது தாபன விசுவாச நடவடிக்கைகளாக இருக்கும். பொதுமக்களின் பணத்தில்உல்லாசம்,மற்றும் ஊழல், ஒழுங்கீனம், பொதுமக்களை ஆயுத முனையில் பயமுறுத்துவது, அநாவசியமாக வாகனங்களைக் கடத்துவது போன்ற அடாவடித்தனங்களை கூசாமல் செய்யும்இவர்கள் இவற்றை பட்டாளிவர்க்க சர்வாதிகாரம் என்ற எழுச்சிமிகு கோசத்தால் மூடி மறைக்கப் பார்ப்பார்கள்.

ஆயுதப் போராட்டத்தினாலேயே விடுதலை கிடைக்கும் என்ற ஒருபாதி உண்மையை பிரபல்யப் படுத்தும் இவர்கள் தம் சொந்த நலன்களை காப்பதற்கே ஆயுதங்களைப் பாவிப்பவர்களாக விளங்குவார்கள். இவர்கள் பொதுமக்களின் தனிப்பட்ட பிரச்சனைகளை மனிதாபிமான அடிப்படையில் அணுகுவதில்லை. அவற்றை ஆயுத முனையில் தீர்க்க முனையும் இவர்கள் மக்களை துன்புறுத்தி மிரட்டி தம் இஷ்டப் படி தீர்ப்பை நிலை நாட்டும் செயல் பாடானது உதிரிகளின் சுத்தமான ரௌடித்தனமேயாகும். பொது மக்களிடமும் கடைக்காரர்களிடமும் கப்பம் கேட்கும் தெருச் சண்டியன்கள் போல் இவர்களும் பொதுமக்களைக்கடத்தி, மிரட்டி தம் நிதித்தேவையை பூர்த்தி செய்கின்றார்கள். வியாபாரிகளுக்கும் அவர்களின் வியாபார நிலையங்களுக்கும் பாதுகாப்புகொடுக்கின்றோம் என்ற போர்வையில் இந்த உதிரிகள் சிலர் காவல் இருப்பார்கள். அதற்கு கூலியாக (கப்பமாக) வியாபாரிகளிடமிருந்து கணிசமான தொகையையும் கறந்து விடுவார்கள்

(-8ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெரு நாட்டு மக்களின் விடுதலைப் போராட்டம்

தென் அமெரிக்காவில் பிறேசில், ஆஜென்டினா ஆகியநாடுகளுக்கு அடுத்ததாக மூன்றாவது பெரிய நாடாக பெரு விளங்குகிறது. ''பெரு'' என்றுல் செல்வம் கொழிக்கும் பூமி என்று பொருள்படும். வடக்கு தெற்காக நீண்டு விரிந்த அன்டிஸ் மலைத் தொடர்களைக்கொண்ட பெரு அமெசன் நதியின் முக்கிய பகுதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஏராளமானளவில் கனிப்பொருள், எண்ணெய் மற்றும் கடல்வளங்களைக்கொண்டிருந்தபோதிலும் லத்தீன் அமெரிக்க நாடுகளிலேயே மிகவும் வறிய நாடாக பெரு இருந்துவருகின்றது. பிஸ்மத், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களின் உற்பத்தியில் முன்னணி வகிக்கும் பெரு பெருமளவில் மசகெண்ணெயையும்கடலுணவு வகைகளையும் ஏற்றுமதி செய்கின்றது.

அரை நிலபிரபுத்துவ - அரைக் காலனிய நாடான பெருவை அமெரிக்கா, பிரித்தானியா, மேற்கு ஜேர்மனி, ஈக்குவடோர் போன்ற நாடுகளைச் சேர்ந்த பல்தேசியக் கம்பெனிகள் அதிகளவில் சுரண்டுகின்றன. நாட்டின் மொத்தச் செலவினத்தில் 45 சதவீதம் ஆயுதப்படைகளின் பராமரிப்புக்கும், அரசாங்க நிர்வாகச் செலவுகளுக்கும் செலவிடப்படுவதாலும், முப்பதினாயிரம் கோடி ரூபாவுக்கு மேற்பட்ட வெளிநாட்டுக் கடன் சுமை காரணமாகவும் நாட்டின் பொருளாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இருபத்தைந்து லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தென் அமெரிக்காவில் ஸ்பெயின் ஆட்சியின்கீழ் இருந்த நாடுகளில் பிரதானமான பெரு 1921ம் ஆண்டு ஸ்பெயின் ஆட்சியிலிருந்து ''சுதந்திர''மடைந்தது. 1928ம் ஆண்டு பெரு கம்யூனிஸ்ட் கட்சி ஜோஸ்கார்லோஸ் மரியடெகுய் என்பவரால் ஆரம்பிக்கபபட்டது. இவர் தலைமையிலான பெரு கம்யூனிஸ்ட் கட்சி கிராமப்புறங்களில் கட்சிப் பணியை வலியுறுத்தி புரட்சியின் உந்து சக்தியாக பூர்வ கக்குடிகளையும் விவசாயிகளையும் அணி திரட்டியது.

பெரு கம்யூனிஸ்ட் கட்சி மூன்றாவது அகிலத்துடன் இணைந்தபோதிலும் 1933-ல் மரியடெகுயின் மறைவுக்குப் பின்னர் பெருவின் புரட்சிகரப் போராட்டங்கள் முப்பது வருடங்களாக ஒரு ஸ்தம்பித நிலையை அடைந்திருந்தன. அறுபதுகளிற் பெரு கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்டபோது பெரும்பான்மையினர் கியூபாவின் ஆதரவோடு போராட்டங்களை முன்னெடுத்தனர். இப்போராட்டங்கள் பெரு அரசாங்கத்தினுல் முறியடிக்கப்பட்டன. இதன் விளைவாக வெளிநாட்டு சக்திகளின் ஆதரவுடனேயே விடுதலை காண முடியும் என்ற நம்பிக்கை தளர்ந்து பெரு நாட்டு மக்கள் தமது சொந்தப்பலத்தில் நம்பிக்கைகொள்ளலானார்கள். பெரு கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்டபோது அதிலிருந்து சிறுபான்மைக் குழுவினர் சன்டெரு ரஜா (செங்கொடி) என்ற பெயரில் செயற்பட ஆரம்பித்தனர். இந்த அமைப்பும் பிளவுபட்டபோது 1970ல் பெரும்பான்மையினர் ''ஒளிரும் பாதை'' என்ற இயக்கத்தை ஆரம்பித்தனர். சுயாதீனத்துவம், சுயசார்பு இறைமை ஆகியவற்றை தமது தொடக்கப் புள்ளியாகவும் அடிப்படை நிலைப்பாடாகவும் கொண்டுள்ள இவர்கள் ஆயுத உதவிகள், இராணுவப் பயிற்சிகள், நிதியுதவிகள் என அந்நிய உதவிகளை நம்பியிராது தமது சொந்தக் காலில் நின்றேபோராடுகின்றார்கள்.

பெரு இராணுவ அரசாங்கத்தின் கொடூரமான ஒடுக்குமுறை, விவசாயிகளும் தொழிலாளர்களுமான மக்கள் திரளமைப்பு, மலைகளும் காடுகளும் நிறைந்த பிரதேசம் போன்ற புரட்சிக்கு சாதகமான அம்சங்களை சரிவரப் பயன்படுத்தி ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர். 1982-ம் ஆண்டிலிருந்து பெருவில் நாடு தழுவிய நெருக்கடி நிலையும் அயகுச்சோ உள்ளிட்ட மூன்று பிரதேசங்களில் இராணுவச் சட்டமும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது. பெரு நாட்டு அரசாங்கம் 2000 முதல் 7000 வரை கெரில்லாக்கள் இருக்கக்கூடும் என மதிப்பிட்டுள்ளது. 1983-ம் ஆண்டு மாத்திரம் 2700 தாக்குதல்களை கெரில்லாக்கள் தொடுத்ததாக பெரு நாட்டு அதிபர் பெலாண்டே அறிவித்துள்ளார்.

1982-ல் ஒரு சிறிய கெரில்லாப் படைப்பிரிவு அயகுச்சோ நகரினுள் புகுந்து பொலிஸ் நிலையங்களையும் இராணுவ முகாம்களையும் தாக்கியதுடன் அங்கு சிறைவைக்கப்பட்டிருந்தவர்களையும் மீட்டது. கெரில்லாக்கள் பல நாட்டுப்

—9-ம் பக்கம் பார்க்க

# அநுராதபுரம் படுகொலைகளும் அரசின் பேச்சுவார்த்தையும்

மே 14, 1985 அன்று அநுராதபுரத்தில் பட்டப்பகலில் நூற்றுக்கணக்கான அப்பாவி சிங்கள மக்கள் கொல்லப்பட்டார்கள். சந்தைக்கு, கந்தோருக்கு சென்றவர்கள், பாடசாலைக்கு போனவர்கள், நாளாந்தக்கடமைகளை முடிக்கவென்று நகரத் தெருக்களில் இறங்கயவர்கள் என்று கொல்லப்பட்ட அனைவரும் அப்பாவி பொது மக்களே.

இக்கொலைக்கு காரணமானவர்கள் சீருடையில் வந்திருந்தார்களெனவும் தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாடினார்களெனவும்சிறீலங்கா அரசாங்கம் தெரிவித்திருந்தது இக்கொலைகளுக்கு துப்பாக்கிகள் மட்டுமல்ல வாள், கத்தி போன்ற ஆயுதங்களும் பாவிக்கப்பட்டன என்றும் நூற்றுக்கணக்கானோர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாகவும் பத்திரிகைகள் கூறின.

இச்சம்பவத்தையடுத்து அனுராதபுரத்தில் பல தமிழர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. அப்பாவி தமிழர்கள் மீண்டும் உயிரிழப்பிற்கும் உடமையிழப்பிற்கும் உள்ளானார்கள். அனுராதபுரம் கொலைகளின் தாக்கம் வடக்கிலும் உடனடியாக எதிரொலித்தது. நெடுந்தீவிலிருந்து படகில் வந்த 37 அப்பாவி தமிழர்கள் சிறிலங்கா கடற்படையினரால் கோரமாகக் கொலைசெய்யப்பட்டனர்.

நெடுந்தீவிலும், அனுராதபுரத்திலும் கொல்லப்பட்ட தமிழ் மக்கள் பற்றி எதுவும் சிந்தியாது அனுராதபுரத்தில் நடந்த அப்பாவி சிங்கள மக்கள் கொலை பற்றி தமிழ் மக்கள் சிலர் திருப்திப்பட்டுக் கொண்டதைக் காணமுடிந்தது வேதனைக்குரியது. யூலை, 1983 வன்செயல்களையடுத்து தொடர்ச்சியாக தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்படும்வன்செயல்கள் தமிழ் மக்களின் உணர்வை மரத்துப் போகச் செய்திருக்கலாம். ஆனாலும் அவர்கள் அனுராதபுர தாக்குதல் குறித்து மகிழ்ச்சியடைவது வெட்கத்துக்குரியவையே.

அப்பாவித தமிழ் மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டபோதெல்லாம் நாமஎப்படிதுயரத்தையும், ஆத்திரத்தையும் காண்பித்தோமோ அதுபோலவே அநுராதபுரத் தாக்குதலில் கொல்லப்பட்ட அப்பாவி சிங்கள மக்களுக்கும் எமது அனுதாபத்தை தெரிவிக்கினறோம். அனுராதபுரப் படுகொலைகள் மோசமானவையும் படுபிற்போக்கானதும் என வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஆயிரக்கணக்கில் அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்பட்டதையும் கோடிக்கணக்கில் உடமைகள் அழிக்கப்பட்ட வரலாற்றுண்மைகளையும் காரணங்காட்டி இக்கொலைகளை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது. தமிழ்மக்களின் போராட்டம் நீதிக்கும் சமாதானத்திற்குமான போராட்டம். அந்தப் புனிதமான போராட்டத்தில் அப்பாவிச் சிங்கள மக்கள் இப்படி திட்டமிடப்பட்டு கொலைசெய்யப்பட்டது தமிழீழ விடுதலை போராட்டத்தினை மோசமாக்க் களங்கப்படுத்தும் அவமானகரமான செயல் என்பதில் சந்தேகமேயில்லை.

நாட்டில் வன்செயல்கள் மூலம் அப்பாவித் தமிழ் மக்களை கொன்றுகுவித்து வந்த சிறிலங்கா அரசு அநுராதபுரத் தாக்குதலைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டமாக ஒப்பாரி வைக்கத் தொடங்கிற்று. இறந்த மக்கள் குறித்து அனுதாபம் காண்பிப்பதைவிட இக்கொடுமைகளை தமிழீழ விடுதலைப்போராளிகள்தலையில் சுமத்துவதிலும் தமிழீழ விடுதலை போராட்டத்திற்கெதிராக உலக நாடுகளில் ஆதரவு திரட்டுவதிலும் சிறிலங்கா அரசு கூடிய கவனம் காட்டியது. தமிழீழ விடுதலை போராளிகளை பயங்கரவாதிகள் என்று கோடிட்டு காட்டியது எவ்வளவுபெரிய உண்மை என்று உலக நாடுகளில் செய்த பிரசாரம் வீண்போகவில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உலக நாடுகளில் திரண்ட ஆதரவை குலைக்கவும், தன்கயமைகளைமறைப்பதற்கும் சிறிலங்கா அரசு செய்த முயற்சிகள் ஓரளவிற்கு பலனைக்கொடுத்திருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் போராட்ட அமைப்புகள் அனைத்தும் அநுராதபுரத் தாக்குதலை தாம் செய்யவில்லை என்று மறுப்புத் தெரிவித்ததோடு கண்டனமும் தெரிவித்திருக்கின்றார்கள். ஆனாலும் இந்த பழி தமிழீழ விடுதலை அமைப்புகளிலேயே வீழ்ந்திருப்பதை யாரும் தட்டிக் கழிக்க முடியாது.

அநுராதபுரத்தாக்குதலைத் தொடர்ந்து உலக நாடுகளில் மனிதாபிமான அடிப்படையில்தமிழீழவிடுதலைப்போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியவர்கள் இன்று தடுமாறவேண்டிய இக்கட்டான நிலைமையில் உள்ளாகியிருக்கின்றார்கள். தார்மீக ஆதரவு வழங்கிய சிங்கள முற்போக்கு சக்திகள் கையறு நிலைக்குதள்ளப்பட்டிருக்கிறூர்க்ள். அநுராதபுரத் தாக்குதலைத் தொடர்ந்து ஜே. ஆர். இதுமாதிரி நிகழ்வுகளை மேலும் முகம்கொடுக்க நேரலாம் என அஞ்சி யுத்த நிறுத்திற்கும் மீண்டும் பேச்சுவார்த்தைக்கும் முன்வந்துள்ளார்உடனடியாக இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தியை ஜே. ஆர். சந்தித்ததன் விளைவாக பூட்டானில் தமிழீழ விடுதலை அமைப்புக்களுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளது; உடனடியாக போர்நிறுத்தமும் ஏற்பட்டுள்ளது; எனக் கருதப்படுகின்றது.

ஜே. ஆர். அநுராதபுரதாக்குதலைக் கண்டுஅஞ்சியே தற்போது சமரச முயற்சிகளுக்குமுன் வந்திருக்கின்றார் என பீ. பீ. சி. செய்தி தெரிவித்துள்ளது இதுதான் உண்மையென்றால் மனிதாபிமானம்கொண்ட அனைவரும் இந்த சமரசப் பேச்சுவார்த்தைகள் குறித்து நாணவே செய்வார்கள். கோரக்கொலைகளினால்ஏற்பட்ட அச்சத்தின் பிரதிபலிப்பாக ஏற்படும் சமரசத் தீர்வுகள் என்றும் நிலைத்து நின்றதில்லை. அது ஒரு சந்தர்ப்பவாத முடிவிற்கே வழி சமைக்கும். அத்துடன் அப்பாவி பொதுமக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறைகளும்கூட ஆக்கபூர்வமான அரசியல் மாற்றத்தை கொண்டுவரக்கூடியன என்ற குருட்டுத்தனமான உணர்வை வளர்ப்பதற்கும் இச்சம்பவங்கள் காரணமாகப் போகின்றன.

பரஸ்பர புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, சகிப்புத்தன்மை, சுயகௌரவம் என்பவற்றின் அடிப்படையிலேயே ஆக்கபூர்வமான உடன்பாடுகள் ஏற்பட முடியும் அச்சத்தின் காரணமாக ஏற்படும் உடன்பாடுகள் தற்காலிக சமாளிப்புகளாகவே அமையும். இன்று ஏற்பட்டுள்ள சுமூக சூழ்நிலக்கு அநுராதபுரம் தாக்குதலே காரணம் என்று அதை நியாயப்படுத்துபவர்கள் இதைப் புரிந்துகொள்வது அவசியம்.

## வேள்வி

பிள்ளைக் கறி கேட்க அந்தப்
பரமசிவனுக்கு மட்டும்தான்
பாக்கியதை உண்டா என்று இந்த
உமாமகேஸ்வரனும் போட்டிக்கு கிளம்பி
உலா வந்த போது
தமிழீழத்தில் அவன்
பார்வை பதிந்த இடம்
சுழிபுரம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# இரவல் புரட்சி

கடந்த இரண்டுவருடங்களாக அல்லோல கல்லோலப்பட்டிருந்த வடபகுதியில் இப்பொழுது திடீரென்று ஒரு அமைதியான வாழ்வு திரும்பிக்கொண்டிருக்கின்றது. போர் நிறுத்தத்தை தொடர்ந்து மக்கள் திம்பு பேச்சு வார்த்தைகள் நல்ல முடிவுகளைக் கொண்டுவரும் என்றெல்லாம் எதிர்பார்க்கவும் தொடங்கிவிட்டார்கள்.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுவிட்டது. புகையிரத சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. சினிமா தியேட்டர்களில் இரவு இரண்டாம் காட்சி சினிமாவும் காண்பிக்கத் தொடங்கிவிட்டன. கோயில் திருவிழாக்கள் உற்சவங்கள் மீண்டும் களை கட்டஆரம்பிக்கின்றன. கடந்த காலத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த அத்தனை அபிலாசைகளையும் ஒரேயடியாக நிறைவேற்றிவிடவேண்டும் என்ற அவதியில் மக்கள் பரபரத்துக் கொண்டிருக்கின்றார்கள் இது ஒரு புறம்.

மறுபுறம் தமிழீழ விடுதலை ஒன்றையேகுறியாகக்கொண்டு இயங்கிய போராளிகட்கு இந்த அவலமான காட்சிகள் தாங்கமுடியாத துயரத்தை வழங்குகின்றன. உயிர்துடிப்பான வாழ்வை, உறுதியான தோழர்களை இழந்துபோன தமிழீழ போராளிகளுக்கு தமிழீழ மக்கள் இவ்வளவு சுலபமாக தமிழீழ அலையிலிருந்து விடுபடும் போக்கு ஒருவித ஏமாற்றத்தையும் சோர்வையும் வழங்கிவருகிறது. இவ்வளவு வேகமாக தமிழீழ மக்கள் ஓய்ந்துபோக எண்ணுவார்கள் பழைய வாழ்க்கைக்கு திரும்ப முயலுவார்கள் என்று அவர்கள் யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. கடந்த காலத்தில் தம் கரங்களில் தவழ்ந்து தமிழீழ மக்கள் இப்பொழுது தம் பிடியிலிருந்து விலகிச் செல்ல முயல்வதை சகிக்க முடியாத வேதனையுடன்விழுங்கிக்கொண்டிக்கின்றார்கள்.

கடந்த இரண்டு வருடங்களாக வீசிய தமிழீழ விடுதலை அலை இப்படி திடுதிப்பென்று ஓய்ந்துபோவதன் மர்மம் என்ன; தமிழீழ விடுதலை இயக்கங்கள் திடீரென்று இப்படி நிராதரவான நிலைக்கு தள்ளப்படுவதன் காரணம் என்ன?

தமிழீழவிடுதலைப்போராட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்ததே ஓரளவு அனுதரவு மனோபாவம் தமிழீழ மக்களின் துயரத்தில் கலந்திருந்தது. யூலை, 1983 வன்செயல்களின் பின் தமிழீழ மக்கள் ''இந்திய அரசுதான் எமக்கு விமோசனம் காட்டப்போகிறது'' என்ற குருட்டுத்தனமான நம்பிக்கையை வரவழைத்து இந்திய வானொலிச் செய்திகளில் எப்பொழுது இந்தியாவின் படையெடுப்பு நிகழப்போகிறது என்ற செய்தியைக் கேட்க ஆவலுடன் இருப்பவர்களாக காதுகளைக் கூர்மையாக்கிக்கொண்டிருந்தார்கள். இந்திய அரசு அமிர்தலிங்கத்திற்கு முக்கிய இடம் கொடுக்கிறது என்றவுடன் அமிர்தலிங்கத்தின் வீரப்பிரதாபங்கள் மக்களால் சிலாகித்துப் பேசப்பட்டன. இது ஒரு கொஞ்ச நாட்களுக்குத்தான். பின்பு தமிழர் விடுதலைக் கூட்டணியைவிட ஆயுதப் போராட்ட இயக்கங்களுக்குத்தான் இந்தியரசு ஆதரவு காட்டுகின்றது எனக்கண்டு தமிழீழமக்கள் இயக்கங்களை வாரி அணைத்து ஆதரவு காட்டத் துணிவு பெற்றார்கள்.

இப்போது இந்திய அரசு திம்பு பேச்சுவார்த்தையை முன்நின்று நடாத்தும்போது மக்கள் எல்லாவற்றையும் கைவிட்டு ஒரேயடியாக விடுதலைப்போராட்டத்திலிருந்து விலகிச்செல்லும் போக்கு சாதாரணமாகவே தோன்றியுள்ளது. தமிழீழ மக்களின் தமது சொந்தப்பலத்தில் அல்லாமல் வெளிநாடுகளின் துணையோடுதான் வாழமுடியும், போராட முடியும், தீர்வுகாண முடியும் என்ற தன்னம்பிக்கையில்லா மனப்பான்மையின் வெளிப்பாட்டை இன்று தமிழீழ விடுதலைப் போராளிகள் தாங்கமுடியாமல் குமுறிக்கொண்டு முகம் கொடுக்கிறார்கள். கடந்த காலத்தில் தமிழீழ மக்களின் இந்தஅனாதரவு நிலையிலேயே குளிர்காய்ந்த விடுதலை இயக்கங்கள் அதன் பலனை இப்போது அனுபவிக்கின்றன.

ஒரு வகையில் தமிழீழ மக்கள் இந்த அனாதரவான மனோநிலைக்குஎதிராக செல்வதைக் கூட விடுதலை இயக்கங்கள் விரும்பியிருக்கவில்லை. அவர்கள் அந்த உணர்வை ஊட்டியே தம்மையும் வளர்த்துக் கொள்ள முன்வந்தார்கள். சொந்தப்பலத்தில் விடுதலை காணவேண்டும் என்ற உணர்வை ஊட்டுவதற்கு பதிலாக இரவல் படையில் விடுதலை நடாத்தும் போக்கிற்கு எதிராகச் சென்றவர்கள் சொற்பமே.

''சோசலிச நாடுகள் எமது இயக்கத்தைதான் அங்கீகரிக்கின்றன.''

''சோசலிச நாடுகளுடன் எமக்கு தொடர்புண்டு.''

''எம்மைத்தான் இந்திய அரசு நம்புகிறது''

''எமக்கு இந்திய அரசின் ஆதரவும் நட்பும் நெருக்கமாக இருக்கிறது''

இப்படி ஏதோ ஒரு வகையில் தமிழ் மக்களுக்கு வெளிநாட்டு உதவியில் கொண்ட பற்றுதலை பாதுகாத்து இயக்கங்கள் ஆற்றிய பங்களிப்புகளும் சாதாரணமானவையல்ல. இவ்வாறு விடுதலை இயக்கங்கள் ஏதோ ஒரு வகையில்தமிழீழவிடுதலைப்போராட்டத்தைமுழுமைப்படுத்தஅந்நிய உதவிகளை சாந்திருப்பதை மீள் பரிசோதனை செய்ய வேண்டிய காலம் நெருங்கிவிட்டது.

தமிழீழ விடுதலை இயக்கங்கள் வெளிநாட்டுதவியை பின்வரும் வகைகளில் எதிர்பார்க்கின்றன, தமது இயக்கத்திற்கு அங்கீகாரம் தரவேண்டும்; நிதியுதவி செய்யவேண்டும், ஆயுத உதவியும் ஆயுத பயிற்சியும் வழங்கவேண்டும் என்ற வகையில் இவை அடங்குகின்றன. இவற்றில் வெளிநாட்டரசாங்கங்களைச்சுற்றிப்போட்டாபோட்டியிடுகின்றன. ஒரே இலட்சியத்தைக் கொண்ட விடுதலைஇயக்கங்கள்ஐக்கியப்பட்டு போராட வேண்டும் என்றஎண்ணத்திற்குமுரணாக ஒன்றோடொன்று முட்டிமோதுவதற்கும்கூட இந்த வெளிநாட்டுதவிகளை பெற முனையும்போட்டாபோட்டியும் பிரதான காரணமாக அமைந்துவிடுவதிலிருந்து வெளிநாட்டு உதவிகளில் மிளிரும் தீய செயற்பாடுகளை எடைபோட முடியும்.

ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் அனைத்தும் மக்கள் சக்தியை நிராகரிப்பதில்லை. அவை மக்கள் அமைப்புக்களை கட்டி எழுப்புகின்றன. ஆனால் இயக்கத்தின் நிதித் தேவைகட்கு அவை மக்களைமாத்திரம்நம்புவதில்லை வெளிநாட்டுஅரசாங்கங்களையும் சமூக சேவை அமைப்புக்களையும் நாடி நிற்கின்றன. இந்த நிதியுதவி மூலம் தம் சுயாதீனத்தை காப்பாற்றிக்கொண்டு வளரலாம் என்று மனப்பால் குடிக்கின்றன. ஆனால் இறுதியில் தோற்றுப்போகின்றன. ஏனென்றால் விடுதலை இயக்கங்களுக்கு நிதியுதவி வழங்கும் தாபனங்களும் சாதாரணமானவையல்ல- அவையும் நீண்ட நோக்குடையவை- தந்திரமானவை- புரட்சிகர இயக்கங்களுக்கு எவ்வாறு நிதியை வாரிவழங்கி அவற்றை முறியடிப்பது என்பது அவர்களுக்கு கைவந்த கலை. இயக்கங்களுக்கு மக்களிலிருந்து அந்நியப்படும் மனநிலையை எப்படி வளர்க்கலாம் என்பதையறிந்து அதை சாதுரியமாகச் செயற்படுத்துகின்றார்கள். வெளிநாட்டு நிதியைப் பெற்றுக்கொண்ட இயக்கமும் அது இலவசமாகக் கிடைத்தசென்ற துணிவில் தான்தோன்றித்தனமாக மனம்போன போக்கில் ஊதாரித்தனமாக நடந்துகொள்வார்கள்- செலவுகளும் கட்டுமீறும்- இயக்கத்தில் கடும் உழைப்பு, சிக்கனம் என்பன மறைந்து போகும். இயக்கம் மக்களை மதித்து அவர்களிடமிருந்து நிதிபெற வேண்டும என்ற மனப்போக்கும் மறைந்தவர்களாக ஊழல் பேர்வழிகளாக மாறிவிடுவார்கள். எவ்வளவோ உயர்வான கொள்கைகளையும் உயர்ந்த அர்ப்பணிப்புகளையும் தியாகங்களையும்கொண்ட இயக்க ஊழியர்கள் சோர்ந்துபோவார்கள். வெளிப்பார்வைக்கு இயக்கம் பலமானதாகத் தோன்றினாலும் சாராம்சத்தில் பலவீனமானதாகவே இருக்கும்.

வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடம் சில சமூக சேவைகளை காரணம் காட்டி இயக்கங்கள் நிதியுதவிகளை பெறுமிடத்து வேறுவகையான சிக்கல்களை இயக்கங்கள் முகம்கொடுக்க நேரிடுகின்றன. நிதி வழங்கும் நிறுவனத்தை திருப்திப்படுத்த வேண்டி இயக்கங்கள் தம் வேலைத்திட்டங்களை மாற்ற வேண்டியிருக்கும். இயக்க போராளிகளை அனாவசிய வேலைகளில் ஈடுபடுத்தவேண்டிவரும். அவ்வாறு சமூகவேலைகளில் ஈடுபாடு காட்டும் போராளிகளும் படிப்படியாக தம் புரட்சிகர உணர்வை இழந்து போவார்கள். சுய சார்பு, கடும் உழைப்பு என்பவற்றிற்கு பதிலாக சொகுசான வாழ்வு வேண்டியதொன்றாக மாறிவிடும். இந்ததீய விளைவுகளைப் பற்றி வெளிநாட்டு நிதியுதவி பெறும்போது சிந்திப்பது மனதுக்கும் அசௌகரியமாகவிருக்கும்.

இவ்வாறு வெளிநாட்டு நிதியில் இயக்கம் கணிசமான அளவு தங்கியிருக்கும்நிலைஏற்பட்டதும் பட்டென்று அந்த உதவி நிறுத்தப்படும். வெளிநாட்டு நிதி நிறுவனம் அப்படி ஏதாவது முடையைக் கொடுப்பார்கள். உடனே விடுதலை இயக்கம் கலங்கிப்போய்விடும். இப்பொழுது அதன் ஊழியர்கட்கு கடுமையான வாழ்வு முடியாததொன்றாகிவிடும். மக்களில் தங்கியிருப்பது வீண் சிரமம் என கருதத் தலைப்படுவார்கள். விடுதலை இயக்கத்தின் கொள்கைகள் சில கைவிடப்படவேண்டும் என வற்புறுத்துவார்கள். வெளிநாட்டு உதவி தாராளமாகக் கிடைக்கும் வகையில் தாபனத்தின் சகல கதவுகளும் திறந்துவிடப்படும்போது இயக்கத்தின் விடுதலைப் பற்றுதலும், கடும் உழைப்பும், பலமும், திறக்கப்பட்ட கதவாலேயே பறந்து போவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

உயர்வான கொள்கையுடைய புரட்சிகர இயக்கம் இப்படி வெளிநாட்டு உதவிகளினால்சீரழிந்து செல்லும். இயக்கங்கள் நிதித் தேவையை இப்படி பூர்த்திசெய்ய விரும்புவதுபோல ஆயுத உதவி, ஆயுத பயிற்சி என்பனவற்றிற்கும் வெளிநாடுகளையேஎதிர்பார்க்கின்றன. ஒரு நாட்டை முழுமையாக அல்லது கணிசமான அளவிற்கு ஆயுதங்களிற்கு நம்பியிருக்கும் விடுதலை இயக்கத்தின் தனித்துவம் ஆயுத உதவி வழங்கும் நாட்டிடம் அடகு வைக்கப்படுகிறதென்பது தெளிவு. இந்த ஆயுத உதவியை பெற்றுக் கொள்ளும் ஆரம்ப கட்டத்தில் உதவி வழங்கும் நாடு பெரிதாக நிபந்தனை ஏதும் வழங்காது அது போராட்டத்தை ஆரம்பிக்கவே உற்சாகமூட்டும். அந்த உதவியை நம்பி போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்பு யுத்த நிலைமை மேலும் கடுமையானதாகும். அப்பொழுது பாவிக்கப்பட வேண்டிய ஆயுதங்களின் தொகையும் அதிகரிக்கும். இந்த சந்தர்ப்பத்தில்தான் ஆயுத உதவி வழங்கும் நாடுகள் நிபந்தனைகளை முன்மொழியும். இந்த நிபந்தனைகளுக்கு கட்டுப்படாவிட்டால் போராட்டத்தில் தோல்வி காண வேண்டியேற்படும். இதனால் என்னதான் புரட்சிகர அமைப்பாக இருந்தாலும் இறுதியில் ஆயுத உதவிகள் வேண்டி, தம் கொள்கை, நடைமுறை யாவற்றையும் ஆயுத உதவி வழங்கும் நாடுகளின் விருப்பத்திற்கேற்ப மாற்றியமைக்க வேண்டியேற்படும். ஆயுதங்களைப்பெற வேறு மார்க்கங்கள் பற்றி சிந்தியாமல் அனாதைபோல் வெளிநாட்டு ஆயுத உதவியை நம்பி இயக்கங்கள் வெகு சுலபமாக மக்களில் இருந்து நிராதரவாகிச் சீரழிவது தவிர்க்க முடியாததாகும். ஆயுதங்களைவெளிநாட்டுதவி மூலம் சுலபமாகப் பெறும் வாய்ப்பு இருக்கும்போது நாம் ஏன சிரமப்படவேண்டும் எனக் கருதும் இயக்கங்கள் ஒரு விடயத்தை கவனத்தில் எடுக்க வேண்டும். இன்று உலகில் மிக லாபம் தரக்கூடிய உற்பத்தி ஆயுத உற்பத்தியே யாகும். எல்லா நாடுகளும் இதில் போட்டிபோட்டு ஈடுபட்டு அதிக லாபத்தை சம்பாதிப்பதில் குறியாக இருக்கின்றார்கள். இந்த ஆயுத உற்பத்தியாளர்களுக்கு தேவையான விடயம் உலகில் யுத்தம் நிகழ்ந்துகொண்டிருக்க வேண்டும் என்பதே. இல்லாவிட்டால் இவர்களது ஆயுத உற்பத்தி வியாபாரம் படுத்துவிடும். ஆகவே விடுதலை இயக்கங்களைக்கூட இவர்கள் ஆதரிப்பதுபோல பாசாங்கு காட்டுவார்கள். ரகசியமாக ஆயுதங்களை விற்பார்கள். விடுதலைஇயக்கங்கள் தாக்குதலை தொடங்கியதும் பாதிக்கப்பட்ட அரசு ஆயுத கொள்வனவுக்காகப் பறந்து திரியும். இதன்மூலம் பெருமளவு லாபம் ஆயுத உற்பத்தியாளர்களுக்கு வந்து சேரும்.

மேலும் வெளிநாட்டரசாங்கங்கள் வழங்கும் இராணுவப் பயிற்சியும் ஒரு விடுதலை இயக்கத்தின் கொள்கைக்கும் வேலைத் திட்டத்திற்கும் முரணாக இடம்பெறும் வாய்ப்புகள் நிறைய உண்டு. அத்துடன் அந்த இராணுவப் பயிற்சி எமது நாட்டின் சூழலுக்கு மிகவும் பொருத்தமானதாகவும் அமைந்துவிடமாட்டாதது டன் அத்தப் பயிற்சி மூலம் மிக நவீன ஆயுதங்களுடன் பரிச்சயமாகும் போராளிகள் இயல்பாகவே நவீன ஆயுதங்களின்றி யுத்த முனைக்கு இறங்கும் தைரியத்தை இழந்துவிடுகின்றார்கள். இதன்மூலம் போராளிகளின் துணிகரமான மனோபாவம்இழக்கப்படுகின்றது. நவீன தொழில் நுட்பத்தின் மீதான கவர்ச்சியாகத்தினையும் துணிச்சலையும் பின்தள்ளிவிடுகின்றது.

தமிழீழவிடுதலைப்போராட்டத்தில் இழையோடும் மோசமான பிறிதொரு அம்சம் ஒரு நாட்டின் அங்கீகாரத்தைதேடி ஓடுவதாகும். ஏதாவது ஒரு நாட்டின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும் என்பதற்காகப் பரபரக்கும் இயக்கங்கள் அந்தப் போட்டியில் ஒருபோதும் வெற்றியடையப்போவதில்லை. அப்படிவெற்றிபெற்றதாகக் கருதினால் அதனை தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தோல்வியாகவே கருத வேண்டும். முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகள் மாத்திரமே விடுதலைக்கு எதிரானவை. சோசலிச நாடுகள் விடுதலைக்கு ஆதரவாகச் செயல்படும் என்ற நம்பிக்கை யதார்த்தமானதல்ல. இன்று உலகில் சோசலிசப் புரட்சியை செய்து முடித்த நாடுகள் பாதைமாறிப் போய்க்கொண்டிருப்பது வெறுமனே கண்டு கொள்ளாது புறக்கணிக்கக் கூடிய விடயங்களல்ல. சிறிய வறிய நாடுகளை விடுதலைப் போராட்டங்களைதம் கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதன் மூலம் புதிய வகைசுரண்டலை இந்த புரட்சி நடாத்திய சோசலிச நாடுகளும் செய்து

—9-ம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# “ஆயுதங்களைக் கீழே போட்டதும் எமது புரட்சி முடிவடையும்”

**- உமாமகேஸ்வரன்**

“நாங்கள் மக்கள் விடுதலைக்காகவே போராடுகின்றோம் தமிழ் மக்களை சிறிலங்கா படையினர் ஆயுதத்தால் தாக்கியதால்தான் நாம் ஆயுதம் தூக்கினோம். தமிழ் மக்களை அரசு நசுக்குவதை நிறுத்தட்டும். நாங்களும் ஆயுதங்களை கீழே போடுகிறோம். என்று ஆயுதங்களை கீழே போடுகின்றோமோ அன்று புரட்சி முடிவடையும்”

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபரான உமாமகேஸ்வரன் மதுரையில் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறினார். (வீரகேசரி ஜூன், 13, 1985)

புரட்சியாளர்கள் பற்றிய மதிப்பீடு குறித்து தோழர் லெனின் எச்சரித்த பின்வரும் கருத்தாக்கம் மிகவும் முக்கியமானது.

“வர்க்கப் போராட்டத்தை மட்டும் ஏற்பவர்கள் மார்க்சிசவாதிகள் ஆகிவிடமாட்டார்கள். வர்க்கப்போராட்டத்தை ஏற்பதை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்பது வரை விரித்துச் செல்பவனே மார்க்சிசவாதியாவான். மார்க்சிசவாதிக்கும் சாதாரண சிறு (அதேபோல் பெரு) முதலாளிக்கும் இடையேயுள்ள மிகவும் ஆழமான வேறுபாடாக இதுவே அமைகிறது. மார்க்சிசம் பற்றிய உண்மையான புரிதலையும், அதை ஏற்றுக் கொள்வதையும் சோதித்து அறிவதற்கான உரைகல்லும் இதுதான்” (லெனின் தொகுப்பு நூல்கள் - வால்யூம் 25 பக்கம் 411)

பல்வேறு வகையான திரிபுவாத, புரட்டல் வாத கருத்துக்கள் மார்க்சிசத்தை கொச்சைப்படுத்திய வேளையில் மார்க்சிசவாதிகள் மேற்கூறிய அடிப்படையில் கடுமையாகப் போரிட்டு வந்திருக்கிறார்கள் உமாமகேஸ்வரன் ஆயுதப் புரட்சி பற்றி வெளியிட்ட மேற்படி கருத்துப்போல ஒரு அபத்தமான ஒன்றை இதற்கு முன் மார்க்சிசவாதிகள் முகம் கொடுத்ததில்லை என்று துணிந்து கூறலாம். அதனால் உமாமகேஸ்வரனின் இந்த கருத்துக்கு பதில் கூற கார்ல் மார்க்ஸ், லெனின் ஆகியோர் கூறியபின்வரும்கருத்துக்களை நினைவுபடுத்தலே போதுமானது.

“வர்க்கங்களைஒழித்துக்கட்டுவதற்கு ஒரு நீண்ட, ஆயுதமேந்திய கடினமான விடாப்பிடியான வர்க்கப் போராட்டம் தேவைப்படுகிறது. இது முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கி எறிந்த பிறகு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவிய பிறகு மறைந்து விடாது. மாறாக அதன் வடிவங்கள் மட்டுமே மாறுகின்றன. பலவகைகளிலும் அது மேலும் கடுமையாகிறது”

-லெனின்

(லெனின் தொகுப்பு நூல்கள் -வால்யூம் 29, பக்கம், 389

“ஜனநாயக நோக்குள்ள சிறு முதலாளிவர்க்கம் கோரிக்கைகளில் பெரும்பாலானவற்றை சாதித்துக் கொண்டு புரட்சியை கூடியவரையில் முடிவுக்கு கொண்டுவர விரும்புகிறது. அதேசமயம் புரட்சியை நிரந்தரமானதாகச் செய்வதுநமது விருப்பமும் கடமையும் ஆகும்.

-கார்ல் மார்க்ஸ்

(மார்க்ஸ் - ஏங்கல்ஸ் தெரிவு நூல்கள் - வால்யூம் 1, பக்178

---

(5ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையில் பொதுமக்களுக்கு இந்த உதிரிப் போராளிகளின்தொல்லையிலிருந்தே விமோசனம் தேவைப்படுகின்றது. இந்த உதிரிகளின் ஓங்கி வரும் செல்வாக்கு தமிழீழ விடுதலை போராட்டத்தை மோசமாக பின்தள்ளச் செய்கின்றது. இவர்களை இப்போதேகட்டுப்படுத்தி ஆவன செய்யாவிடில் இன்றைய யு. என். பிக்கு ஊன்று கோலாக இருக்கும் உதிரிகளின் இடத்தை எதிர்காலத்தில் தமிழீழத்தில் இவர்கள் நிரப்புவார்கள் என்று எதிர்பார்க்கலாம். உற்பத்தியில் உடல் உழைப்பில் நாட்டமில்லாத இவர்களின் “கண்டதேகாட்சிகொண்டதேகோலம் என்ற தான்தோன்றித்தனமான போக்கு விடுதலைப் போராட்டத்திற்கு எந்தவொரு வகையிலும் நிறைவு செய்ய கூடியதல்ல.

தமிழ்மக்கள் இந்த உதிரிப் பாட்டாளிகளின் எதிர் புரட்சிகர நடவடிக்கைகளை பல இடங்களில் நேரடியாகத் தரிசித்திருக்கின்றார்கள் அதனால் அந்த அபாயம் குறித்து அவர்கள் எச்சரிக்கையாகவும் இருக்கின்றார்கள். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உதிரி பாட்டாளிகள் புரட்சிகர தேசிய முதலாளிகளுக்குத்தான் சேவை செய்கின்றார்கள் என்றில்லை. அவர்களின் இன்றைய போக்கு உதிரி முதலாளிகளின் சக்தியை பலப்படுத்துவதாகவே அமைகின்றது. உதிரி முதலாளிகள் தமிழீழ விடுதலைப்போராட்டத்தின்இன்னுமொரு மோசமான சக்திகளாகும்.

உதிரிப்பாட்டாளிகளின்செயற்பாடுகளை மக்கள் இனம் கண்டு வெறுக்கும் அளவிற்கு உதிரி முதலாளித்துவ சக்திகளின் கயமைகள் இன்னமும் அம்பலமாகாததால் அவற்றை இங்கு சுட்டிக்காட்டுவது அவசியமாகிறது.

லஞ்சம் வாங்கிக் கொடுக்கும் தரகர்கள் கள்ளச் சந்தைக்காரர், போதைப் பொருள் வியாபாரம் கள்ளச் சாராயம் வடித்தல் போன்ற சட்ட விரோதச் செயல்களின் உரிமையாளர்கள் சமூகத்தில் செல்வாக்கு மிக்க புள்ளிகளாக காணப்படுகிறார்கள். தேர்தல் காலங்களில் அரசியல் வாதிகளுக்கு மிகவும் வேண்டியவர்களாகஇவர்கள்இருப்பார்கள். வாழ்க்கையில் தரங்கெட்ட உணர்ச்சிகளையும் கேடுகளையும் அடிப்படையாகக் கொண்டு கீழான முறையில் பணம் சேர்த்து வருவது இவர்களது பொது இயல்பாகும்.

இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இந்த உதிரி முதலாளித்துவ சக்திகள் பலமான ஆதிக்கம் செலுத்துகின்றார்கள். கள்ளச் சந்தைக்காரர், கள்ளக்கடத்தல் காரர் எல்லாரும் சில விடுதலைப் போராட்ட அமைப்புக்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்களாக வளர்ந்து வருகின்றார்கள். சர்வதேச போதைப் பொருள் கடத்தலில் தமிழீழ விடுதலைப் போராட்ட அமைப்பு ஒன்று ஈடுபட்டுவருவது அண்மையில் தெரிய வந்துள்ளது. இது உதிரி முதலாளித்துவ செல்வாக்கு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வேரூன்றி வருவதன் வெளிப்பாடேயாகும். சில தமிழீழ விடுதலை போராட்ட அமைப்புக்கள் மாத்திரமே பொருளாதார நடவடிக்கைகளை வற்புறுத்தி ஆக்கபூர்வமான முயற்சிகளைச் செய்து வருகின்றன.

வேறு சில விடுதலைப் போராட்ட அமைப்புகள் இந்த உதிரி முதலாளிகளின் துணையோடு தாபனத்தின் நிதித் தேவைகளை மாத்திரமின்றி விடுதலைப் போராட்டத்தின் சகல வித நடவடிக்கைகளையும் நிறைவுசெய்ய முனைகின்றார்கள். தேசியப் பற்றோ இனப்பற்றோ இல்லாத இந்த தீய சக்திகளின் செல்வாக்கு விடுதலைப் போராட்டத்தை சீரழிக்கவே வகை செய்யும். புரட்சிகர தேசிய முதலாளித்துவ சக்திகளைப் போலன்றி ஜனநாயகம், தனிமனித சுதந்திரம் என்பன குறித்து இந்த உதிரி முதலாளிகளிடம் ஆரோக்கியமான கண்ணோட்டம் கிடையாது.

சகிப்புத்தன்மை, ஏனையோரின் கருத்தை மதித்தல்போன்றன இவர்களால் விரும்பப்படாதவையாகும். தாபனத்தில் தவறுகளுக்கெதிராக கேள்வியெழுப்புபவர்கள் குறைகள், ஊழல்கள் களையப்படவேண்டுமென்று வாதிடுபவர்கள்எல்லோரையும் சதிகாரர்களாக இனம் கண்டு அடக்கப்படுவதற்கும், சித்திரவதை செய்யப் படுவதற்கும் இந்த உதிரி மனோபாவமே காரணமாகும். இவர்கள் தாபனத்தில் தம் இஷ்டப்படி நியாயங்களை உருவாக்குவார்கள். தாபனத்தை விட்டு ஒருவர் விலகுவது, புதியதாபனம் அமைப்பதெல்லாம் இவர்களை பொறுத்த வரையில் ஜீரணிக்கமுடியாத துரோகச் செயல்களாகும்- வெளிப்பூச்சுக்கு தம்மை ஜனநாயக [illegible] கொண்டாலும் ரகசியமாக தமது அராஜக நடவடிக்கைகள் மூலம் சக தோழர்களையும் சகஇயக்கத் தோழர்களையும் துன்புறுத்துதல், கொலை செய்தல் போன்றவற்றை எவ்விதக் கேள்வி நியாயமின்றி செய்து முடிப்பதற்கு இந்த உதிரி முதலாளித்துவ சக்திகளின் எழுந்தமான போக்கே காரணமாக இருக்கிறது.

இந்த உதிரி முதலாளித்துவ சக்திகளின் மிக மோசமான அம்சம் விடுதலை இராணுவம் என்ற பெயரில் தனிநபர் வழிபாடு கொண்ட ஒரு மிலேச்சத்தனமான இராணுவத்தினை விடுதலைப் போராட்டத்தினுள் உள்நுழையச் செய்துவிடும் கயமையாகும். இவர்களால் உருவாக்கப்படும் இராணுவத்திற்கு மக்கள் சக்தி பற்றியோ மக்களை மதித்து நடக்க வேண்டும் மக்களுடன் கண்ணியமாகப் பழக வேண்டும் என்பதோ என்ற எண்ணமோ இருக்காது. இவர்கள் ஆயுத பலத்தினால் மட்டுமே சகல கைங்கரியங்களையும் நிறைவேற்றிட முடியும் என்ற எண்ணத்தைக் கொண்டிருப்பார்கள். இந்த உதிரி முதலாளிகளின் நலன்களுக்கு சேவகம் புரியும் இராணுவத்தில் ஊழல் பணவிரயம், மோசடி என்பன தாராளமாக இருப்பது இவர்களுக்கு வேண்டியதொன்று. நேர்மை, கட்டுப்பாடு, மனித நேயம், உண்மையான உழைப்பு கொண்டவர்களை இந்த உதிரி முதலாளித்துவ தலைமைகள் தமது தேவை வரைக்கும் பயன் படுத்துவார்கள். அதன்பின்பு அவர்களை விட்டெறிந்து விடுவார்கள். இவர்கள் தாபனத்தில் முக்கியமான இடங்களில் உறவினர், நண்பர், ஊரவர், தெரிந்தவர் என்று தம்முடன் தனிப்பட்ட முறையில் நெருக்கமானவர்களை நியமிப்பார்கள். அவர்கள் தமக்கு என்றென்றும் விசுவாசமாக இருக்கக் கூடியவர்களா என்பதில் மட்டுமே இவர்கள் கவனம் இருக்கும். அவர்களின் கொள்கை தாபனப்பற்று பற்றியெல்லாம் இவர்களுக்கு அக்கறை கிடையாது தாபனத்தில் வெளிப்பூச்சுக்கு பல்வேறு நிர்வாகக் குழுக்களை உருவாக்கினாலும் சாராம்சத்தில் தனிமனித தலைமைக்கு முரணாக [illegible] பார்த்துக் கொள்வார்கள். கீழணித் தோழர்களது கருத்துக்கு இடம் அளிக்க மாட்டார்கள். சக தோழர்களுடன் முரண்பாடு ஏற்படுமிடத்து அவர்களைக் கைது செய்து அமைப்புக்குத் தெரியாமலேயே விசாரித்துத் தண்டிப்பார்கள். இவர்கள் தமது முடிவுகளை விமர்சிப்பதற்கு யாரையும் அனுமதிக்கமாட்டார்கள்.

இத்தகைய போக்குகள் போராட்டத்தை வேகமாக சீரழித்து வருகின்றன. உதிரி முதலாளித்துவ கயமைகள்குறித்து பெரும்பாலான விடுதலைப் போராளிகள் புரிந்துகொண்ட அளவிற்கு பொது மக்கள் புரிந்து கொள்ளவில்லை. விடுதலை போராளிகள் மத்தியில் உதிரிப் பாட்டாளிகளின் குணாம்சம் பலம்பெறுவதற்கு இந்த உதிரிமுதலாளித்துவசக்திகளின் பலம் அதிகரித்தது ஒரு காரணமாகும் ஆய்வாளர்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினூடு தோன்றும் அராஜக நடவடிக்கைகளுக்கு முதலாளித்துவ சக்திகளே காரணம் என மேலோட்டமாக மதிப்பிடுகின்றார்களேயல்லாமல் அதில் பொதிந்துள்ள உதிரி முதலாளித்துவ சக்திகளின் தாக்கத்தை சரிவரக் கண்டு கொள்ளவில்லை. விடுதலைப் போராட்டத்தில் முற்போக்கு சக்திகளை இனம் கண்டு அணிதிரட்டுவது புரட்சிகர தாபனத்தின் கடமையாகின்றது. உதிரிப் பாட்டாளிகளினதும் உதிரிமுதலாளித்துவ சக்திகளினதும் செயல்பாடுகள் தவிர பிறிதொரு வகை சக்திகளும் இன்று விடுதலைப் போராட்டங்களை சீரழித்து வருகின்றன.

இவர்கள் உதிரி அறிஞர்களாவர். (புத்திஜீவிகள்)

புரட்சிகரப் போராட்டத்தில் அறிஞர்களுக்கு (புத்திஜீவிகள்) முக்கியதொரு பங்கு உண்டென்பதை உலகப் புரட்சிகரப் போராட்ட அனுபவங்கள் சுட்டிக்காட்டுகின்றன. அறிஞர்களில் ஒரு வகையினர் பாட்டாளி வர்க்கப்புரட்சியில் நம்பிக்கை கொண்டுழைப்பார்கள். அதற்காகப் பிரச்சாரம் நியாயப் படுத்தல் எல்லாம் இந்த அறிஞர்கள் செய்வார்கள். ஆனால் இவர்கள் பாட்டாளி வர்க்க உணர்வுகளை சுவீகரிக்காதவரை முழுமையாக “புரட்சிக்கோ” “விடுதலைக்கோ” பங்களிப்புச் செய்ய இயலாதவர்களாக ஒதுங்கியே இருப்பார்கள். தியாகம் அர்ப்பணிப்புகளுக்கு அஞ்சுவது இவ் அறிஞர்களின் பலவீனமாகக்கருதப்படுகிறன சொந்த நலனில் குறியாக இருக்கும் இவர்கள் முதலாளித்துவ சீரழிவுகளுக்கு வக்காலத்து வாங்குவதற்காக தம் தனித்துவம், தனிமனித சுதந்திரம் என்ற பிரமாண்டமான கற்பனையில் மூழ்கியிருப்பார்கள். இவர்கள் விடுதலைக்கு பங்காற்ற முடியாமல் இருப்பதற்கும் இக்குறைபாடுகளே காரணமாக இருக்கின்றன. ஆகையால் புரட்சிகர சிந்தனையுள்ள அறிஞர்கள் குறித்தும் எப்பொழுதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதும் புரட்சிகர அனுபவங்களின் பாடமாக இருக்கிறது.

புரட்சிகர மாற்றத்திற்கு தடையாக உதிரி அறிஞர்கள் செயற்படுவார்கள் என்னுமிடத்து உதிரி அறிஞர்களின் செயல் பாடுகளை மிகவும் சாதாரணமான தொன்றாக கருதிவிட முடியாது. முதலாளித்துவ [illegible] வாங்குதல், மூன்றாம்தர சினிமாக்களை கலை இலக்கியம் மூலம் கேவலமான ரசனையை, கருத்துக்களை பரப்புவதே உதிரி அறிஞர்களின் தனியாக மட்டும் இருந்திருந்தால் இவர்களின் கயமையின் ஆழத்தை மதிப்பிட முடியும். ஆனால் இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உதிரிஅறிஞர்கள் மார்க்சிசவேடமணிந்து புரட்சிகர சிந்தனையை நடைமுறையை மழுங்கடிக்கும் கைங்காரியத்தை செய்வதன் மூலம் தமது எதிர்புரட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். தமிழீழவிடுதலைப் போராட்டத்தில் புதிதாக தலையெடுத்துள்ள இந்த உதிரி அறிஞர்கள் உதிரி முதலாளித்துவ சக்திகளின் கூலி எழுத்தாளர்களாகவும் மேடைப்பேச்சாளர்களாகவும் பவனி வருகின்றார்கள். இவர்கள் பணி உதிரிமுதலாளித்துவ உதிரி பாட்டாளி சக்திகளுக்கு இன்று மிகவும் தேவைப்பட்டதொன்றாக கருதப்படுகின்றார்கள். இவர்கள் உதிரி முதலாளித்துவ தலைமைகளை புரட்சிகரத் தலைமைகள் என்று விளக்கம் கொடுக்கவும் அவர்களின் காடைத்தனங்களை, ரௌடித்தனங்களை புரட்சிகர நடவடிக்கை என்று சிலாகித்து பேசவும் தம் ஆற்றலை அர்ப்பணிப்பார்கள். இதற்காக தாபனத்திடம் ஊதியம் பெறும் இவர்களில்சிலர் பகுதிநேர சேவையை வழங்கி ஊதியம் பெறுவதும் உண்டு.

இந்த உதிரி அறிஞர்களைப் பொறுத்தவரை தமது தாபனத்திலும் சக தாபனங்களிலும், சக விடுதலைப் போராளிகளை அநியாயமாக சித்திரவதை செய்து கொல்லப்படுவது குறித்து எல்லாம் அலட்

(10-ம்பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கல்லறைகள்...

(12 ம் பக்க தொடர்ச்சி)

இவர்களும் படுகொலை செய்யப்பட்டு அருகிலிருந்த சவுக்குத் தோட்டத்திலுள் புதைக்கப்பட்டிருக்கலாம் சிவனேஸ்வரன், அகிலன் ஆகியோருக்கு நடந்த சித்திரவதைகளை நேரில் கண்டபின் PLOTஇலிருந்து தப்பியோடிய தோழர் மேலும் தகவல் தெரிவிக்கையில்,

சிவனேஸ்வரன், அகிலன் ஆகியோர் கொண்டுவரப்பட்ட காலகட்டத்தில் ஒரு நாள் பகல் வாமதேவன் PLOTன் மற்றாடொர் வானில் நாலுபேரை சித்திரவதை முகாமிற்கு கொண்டுவந்து சேர்த்தார். இந்நால்வரும் பயிற்சி முகாம் ஒன்றிலிருந்து தப்பியோடியபோது பிடிபட்டார்கள் என வாமதேவன் கூறினார். இவர்களுக்கு உடன் மொட்டையடிக்கப்பட்டு அருகிலிருந்த பயிற்சிமுகாம் 'B' ற்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கே பயிற்சிக்குபுதிதாக வந்திருந்தவர்களிடம் மொட்டையடிக்கப்பட்ட இந்நால்வரையும் காட்டி 'எங்கடை காம்ப்களிலிருந்து எவரும் தப்பியோட முடியாது. தப்பியோடினால் எங்களிடம் பிடிபட்டே தீருவார்கள். பிடிபட்டால் இது தான் நடக்கும்' எனக் கூறினார். பின்னர் மீண்டும் இந் நால்வரும் சித்திரவதை முகாமிற்கு கொண்டுசெல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர். விசாரணையின் ஆரம்பத்திலேயே இவர்கள் நால்வரினதும் குதிக்கால்கள் வீங்கி வெடிக்கும்வரை சவுக்குக் கட்டைகளால் அடித்தார்கள். தொடர்ச்சியாக நாலு ஐந்து நாட்கள் தலைகீழாக கட்டித்தூக்கி சித்திரவதை செய்தனர். இவர்களுள் வில்வியம் என்பவரை அவர் இத்தாலியில் இருக்கும் போது LTTE யுடன் தொடர்பு வைத்திருந்தார் எனவும் அவர் LTTEயின் உளவாளியாக இருக்கலாமெனவும் மீதி மூவரையும் கூட்டிக்கொண்டு LTTE யிடம் தப்பிச்செல்லவிருந்தார் என சந்தேகிப்பதாகக் கூறி மிகவும் மோசமாக சித்திரவதை செய்தனர். ஒரு நாள் அதிகாலை மூன்றரை மணியளவில் வாமதேவன் இவரை விசாரித்துக்கொண்டிருக்கும்போது அடித்த அடியில் இவர் இறந்துவிட்டார். வில்லியத்தின் உடலை ஒரு பாயில் சுற்றிவைத்து அன்று மாலையானதும் சவுக்குத் தோட்டத்திற்கு கொண்டு போய் புதைத்தார்கள்.

இதேகாலத்தில் 'J' முகாம் பொறுப்பாளராகவிருந்த ரமேஷ் என்றழைக்கப்படும் திருகோணமலையைச் சேர்ந்த மகேந்திரன் என்பவரை அழைத்து பயிற்சி முகாம்களின் பொறுப்பாளர் பயிற்சி முகாம் 'B' யிற்கு அவசரமாக போகும்படியும் பயிற்சி முகாம் 'B'யின் பொறுப்பாளரிடம் கொடுக்கும்படி ஒரு கடிதத்தையும் கொடுத்து அனுப்பினார்கள். மகேந்திரன் உடனடியாக பயிற்சி முகாம் 'B' யிற்குச் சென்று கடிதத்தை முகாம் பொறுப்பாளரிடம் கொடுத்தார். கடிதத்தை வாசித்துவிட்டு 'B' முகாம் பொறுப்பாளர் மகேந்திரனை அருகிலிருந்த விசேஷ சித்திரவதை முகாமிற்கு அழைத்து சென்றார். அங்கு மகேந்திரனின் கையையும் காலையும் கட்டிவிட்டு B முகாம் பொறுப்பாளர் சவுக்குக் கட்டையால் மகேந்திரனின் முகத்தில் விளாசினார். முதல் அடியிலேயே மகேந்திரனின் முன்வாய் பற்கள் எல்லாம் நொருங்கின. மகேந்திரன் பொறுப்பாகவிருந்த முகாமிலிருந்து தோழர் ஒருவர் தப்பிச் சென்றதற்கு உதவி செய்திருக்கலாம் என்று சந்தேகித்தே சித்திரவதை செய்தார்கள் மகேந்திரன் கைது செய்யப்பட்டு சித்திரவதை முகாமில் வைக்கப்பட்ட பின்பு எவருமே இதுவரை மகேந்திரனை உயிருடன் காணவில்லை

(இன்னும் வரும்)

## சிறிலங்கா ..

(11ம் பக்க தொடர்ச்சி)

ஒரு ஒடுக்கப்பட்ட சிறுபான்மை இனத்தினுடைய வெற்றி எந்தளவிற்கு எதிரி தனிமைப்படுத்தப்படுகிறான் என்பதிலேயே தங்கியுள்ளது. எனவே சிறுபான்மை இனமான தமிழ் மக்களின் போராட்டத்தின் வெற்றியானது சிங்கள மக்கள் இந்தப் போராட்டத்தை புரிந்துகொள்வதிலும், சிறிலங்கா அரசு சிங்கள மக்களிடமிருந்து எவ்வளவு தூரம் அந்நியப்படுகின்றதென்பதிலும் தங்கியுள்ளது என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்,

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக இலங்கையில் முதலாளித்துவ சக்திகள் இனவாதத்தின் மூலமே தம்மை நிலைநிறுத்தி வருகின்றன. இனவாதத்தினை தூண்டுவதற்கு சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. முதலாளித்துவத்தில் தவிர்க்கமுடியாத முரண்பாடுகளை வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், நிலப்பிரச்சனை,போதிய கல்விவாய்ப்பின்மை போன்ற அனைத்து பிரச்சனைகட்கும் தமிழ்மக்களே காரணம் என சிங்கள மக்கள்மத்தியில் பிரச்சாரம் செய்யப்பட்டன. முதலாளித்துவ அரசியற் கட்சிகள் மட்டுமன்றி புரட்சிகர சக்திகள் என்று கூறிக்கொண்ட இடதுசாரிகள் கூட சிங்கள மக்கள் மத்தியில் இனவாத உணர்வுகளை வளர்த்து அரசியல் லாபம் தேடினர்.

இந்நிலையில் எமது போராட்டமானது சிங்கள மக்களை தமது தவறான எண்ணப்பாடுகளிலிருந்து விடுவிக்கக் கூடியதாகவும் தமது எதிரியை இனம்கண்டு சிறிலங்கா அரசின் உண்மையான வடிவத்தை கண்டுகொண்டு சிறிலங்கா அரசுக்கெதிரான தமது போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தூண்டுகோலாகவும் வழிகாட்டலாகவும் அமையவேண்டும். தற்போது தென்னிலங்கையில் செயற்பட்டு வரும் முற்போக்கு சக்திகளின் நடவடிக்கைகள் பலவீனமான நிலையிலிருந்து பலமடைவதற்கு துணைபோவதாகவும் இருக்கவேண்டும்.

ஆனால் அநுராதபுரத் தாக்குதலின் பின் சிங்கள மக்கள் தூரத்தில் இருந்த பேரர்முனை தமது வீட்டுவாசலுக்கு வந்துவிட்டதாக உணர்ந்துள்ளார்கள். அதுவரை தமது அரசால் ''பயங்கரவாதிகள்'' என்று அழைக்கப்பட்டவர்களின் பயங்கரமான நடவடிக்கைகளுக்கு தாமும் பலியாகிவிடுவோமொ என்று பலமாக அஞ்ச ஆரம்பித்திருக்கிறார்கள். இதன்காரணமாக இவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள மேலும் சிறிலங்கா அரசை பலப்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை எனக் கருதுகின்றார்கள். இதன் விளைவாக தமிழ்மக்களுக்கும் சிறிலங்கா அரசுக்குமிடையேயான யுத்தம் தமிழ்மக்களுக்கும் சிங்களமக்களுக்குமிடையேயான யுத்தமாக மாற்றப்பட்டு விடுவதுடன் எமது போராட்டம் தோற்றுப்போகவும் இது வழிவகுக்கும்.

அநுராதபுரத் தாக்குதலுக்கு வல்வெட்டித்துறை பொலிகண்டிப் பகுதிகளில் சிறிலங்கா படைகள் தமிழ் மக்களை படுகொலை செய்தமை காரணமாக இருந்திருக்கலாம் எனப் பரவலாகக் கருதப்படினும் விடுதலைப் போராளிகளின் ஆயுதங்கள் எந்தக்கட்டத்திலும் பொதுமக்களுக்கெதிராகத் திருப்பப்படுவது அனுமதிக்கப்பட முடியாதது. அப்பாவித் தமிழ்மக்கள் கொலை செய்யப்படுவது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டியதே. ஆனால் அது இராணுவ இலக்குகளைத் தாக்குவதன் மூலம் சாதிக்கப்படவேண்டுமே ஒழிய சிங்கள பொதுமக்களை தாக்குதல் இலக்காக் கொள்வதன்மூலம் அல்ல. சிங்களமக்கள் கொலை செய்யப்படுவது எம்மவர் சிலரின் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தலாம். ஆனால் இது தமிழ்மக்கள் மத்தியிலுள்ள இனவெறியின் வெளிப்பாடே என்றும் இது சரியாக இனம் காணப்பட்டு களைந்தெறியப்படவேண்டும் என்றும் புரிந்து கொள்ள நாம் தவறகூடாது. அநுராதபுரத் தாக்குதல்கள் போன்ற நிகழ்வுகள் தொடருமாயின் மனிதாபிமான அடிப்படையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு கிடைத்த ஆதரவுகள் இழக்கப்பட்டு மொத்தத்தில் படுமோசமான விளைவுகள் ஏற்பட வழிவகுக்கும்.

சிறிலங்கா அரசு இயந்திரம் குறித்தும் சிங்கள மக்கள் பற்றியும் சரியான பார்வையைப் பெற்று எமது ஆயுதப் போராட்டத்தை சரிவர முன்னெடுப்பதே தமிழீழத்தை நடைமுறைச் சாத்தியமாக்க ஒரே வழியாகும்.

## இரவல்...

( 7 ம் பக்க தொடர்ச்சி)

வருகின்றன.

இவர்களுக்கு சர்வதேசப் புரட்சி பற்றியோ, விடுதலைக்காக போராடும் மக்களுக்கோ உதவவேண்டுமென்பதிலோ அக்கறை இல்லை.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தியத்திற்கு போட்டியாக நாடுகளைக் கைப்பற்றவும் மேலாதிக்கம் செலுத்தவும் வந்துள்ள இந்த பாதை தவறிய முன்னால் புரட்சிகர நாடுகளின் அங்கீகாரம் வேண்டுமென்று ஓடுவது விடுதலைப் போராட்டத்தின் தற்கொலை முயற்சியாகும். எப்படியும் எமக்கு ஒரு சோசலிச நாட்டின் ஆதரவு தேவைதான் அப்படியில்லாவிடின் எமது விடுதலையை உத்தரவாதப் படுத்துவது எப்படி என்று குழம்பும் விடுதலைப் போராளிகளுக்கு ஒரு கேள்வி.

ரஷ்யாவில் 1917ல் புரட்சியை நடாத்திய தோழர் லெனின் எந்த சோசலிசநாட்டின் அங்கீகாரத்தை, ஆயுத உதவியை, நிதியுதவியை எதிர்பார்த்தார்? தம் சொந்த பலத்தில் சொந்த மக்களின் புரட்சிகர சக்திகளில் நம்பிக்கை கொண்டதனாலேயே புரட்சியை அவரால் வெற்றிகரமாக்க முடிந்தது. எமது நாட்டு விடுதலைக்கு ஏனைய நாட்டு மக்கள் ரத்தம் சிந்த வேண்டும் என்ற மனோபாவம் ஒருபொழுதும் போராட்டத்தை வெற்றிகரமாக்காது. இது போலித்தனமான புரட்சிகர சக்திகளின் வெளிப்பாடேயாகும்.

எமது விடுதலை எமது மக்களுக்கான விடுதலை இந்த விடுதலைப் போராட்டத்தின் வெற்றி தமிழீழ மக்களின் சொந்தப் பலத்தில் சொந்தத் திறமையில் சொந்த சக்தியில் நிலை நிறுத்தப்படவேண்டும் அப்பொழுதுதான் விடுதலை உறுதியும் உத்தரவாதமும் நிறைந்ததாக விளங்கும் தாபனத்தின் கொள்கை நடைமுறை என்பன தாபனத்தின் முழுக் கட்டுப்பாட்டுக்குட்பட்டதாக இருக்கவேண்டும். அந்நிய உதவிகளை எதிர்பார்த்து விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கலாம் என்று நினைக்கும் அமைப்புகள் 'இந்திய அரசு வற்புறுத்தியதாலேயே அதன் நல்லெண்ணம் காரணமாக போர் நிறுத்தத்திற்கு சம்மதித்துபேச்சுவார்த்தையில்கலந்துகொள்கிறோம்' என்று துயரப்படும் நிலை மீண்டும் ஏற்படாது காப்பது அவர்கள் கடமையாகும். தனது தலை விதியை தனது சொந்தக் கரங்களில் எடுத்துக்கொள்ளாத எந்தவொரு சமூகமும் உருப்படாது என்பதனை நாம் மறந்துவிடலாகாது.

## பெரு...

(6ம் பக்க தொடர்ச்சி)

புற பொலிஸ் நிலையங்களையும் தகர்த்ததோடுவானொலி நிலையங்களையும் தாக்கியுள்ளனர். 1984ல் வடக்கு பெருவில் பாரிய எண்ணெய்க் குழாய்களைத் தகர்த்த இவர்கள் பெருந்தொகையான வெடிமருந்துகளையும் கைப்பற்றினர். இவர்களின் ஆயுதங்களின் பெரும்பாலானவை இராணுவத்தினரிடமிருந்தும் பொலீஸ் நிலையங்களிலிருந்தும் கைப்பற்றப்பட்டவையே. தடிகள், தகரக் குவளைகள், மீன் பிடிவுகைகள் போன்ற உள்ளூரில் கிடைப்பவற்றைக் கொண்டு சக்திமிக்க குண்டுகளை இவர்கள் தயாரிக்கின்றார்கள்.

பன்னிரண்டு வருடகால இராணுவ ஆட்சியின் பின் 1980ல் பாராளுமன்றத் தேர்தல்கள் நடாத்தப்பட்டன. பாராளுமன்றத் தேர்தல்கள் மூலம் மக்களுக்கு உண்மையான விடுதலை கிடைக்கப் போவதில்லை என்பதை வலியுறுத்தி பாராளுமன்றத் தேர்தல்களை கெரில்லாக்கள் நிராகரித்தனர். ஆயுதப் போராட்டத்தையே வலியுறுத்தி பல தாக்குதல்களை மேற்கொண்டனர். பெருநாட்டரசாங்கம் அமெரிக்கா, சோவியத் யூனியன் போன்ற நாடுகளிலிருந்து நவீன ஆயுதங்களை வாங்கி பெருநாட்டு மக்களின் போராட்டத்தை நசுக்க முயன்றும் தம் விடுதலையை தம் சொந்தக் கரங்களில் எடுத்துக்கொண்ட மக்கள் தொடர்ந்தும் போராடி வருகின்றனர். மக்கள் சக்தியை சரிவர அணிதிரட்டி 5 மாகாணங்களை தமதுகட்டுப்பாட்டினுள் கொண்டுவந்துள்ள கெரில்லாக்கள் வெற்றிகரமாக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

## பெரு

பரப்பளவு - 12 லட்சத்து 85 ஆயிரம் சதுர கி. மீ.

சனத்தொகை - ஒரு கோடியே 98 லட்சம் (1983)

பணவீக்கம் - 125% (1983)

வருடாந்த தேசிய உற்பத்தி வீழ்ச்சி - 12% (1983)

வெளிநாட்டு கடன் - முப்பதுனாயிரம் கோடி ரூபா (1983)

வருடாந்த ஆயுதப் படைகளின் செலவு – இரண்டாயிரம் கோடி ரூபா (1983)

ஆயுதப் படைகளின் எண்ணிக்கை - ஒருலட்சத்து 35ஆயிரம் (இராணுவம் - 75,000 ; கடற்படை - 20,000 ; விமானப்படை - 40,000)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மேலும் ஒரு போலி முகத்திரை!

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்களைக் கைது செய்து சித்திரவதை செய்துவரும் சிறிலங்கா அரசு தனது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கெதிராக சர்வதேச அரங்கில் எழுந்த கண்டனக் குரல்களின் காரணமாக, ஒரு ஏமாற்று முயற்சியாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள அப்பாவித் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்வது தொடர்பாக ஜனாதிபதியிடம்சிபார்சு செய்வதற்கு ஒரு ஆலோசனைச் சபையை அமைத்திருப்பதாக ஒரு வருடத்திற்கு முன்பு அறிவித்திருந்தது.

இவ் ஆலோசனைச் சபையினை உருவாக்கியதன்மூலம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டிருப்பதாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி இலங்கையிலும் மற்றும் பிறநாடுகளிலும் பீற்றித் திரிகின்றார்.

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக இயங்கும் இந்த ஆலோசனை சபை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள பல அப்பாவித் தமிழ் இளைஞர்கள் குறித்து விசாரணைகள் மேற்கொண்டு அவர்களில் சிலரை விடுதலைசெய்யுமாறு ஜனாதிபதிக்கு சிபார்சு செய்திருந்தது. ஆனால் அவ்வாறு ஆலோசனை சபையால் விடுவிக்கும்படி சிபார்சு செய்யப்பட்டவர்களும் இன்றுவரை விடுதலை செய்யப்படவில்லை மாறாக அவ்வாறு சிபார்சு செய்யப்பட்டவர்களும் அவசரகால (விசேட) சட்டத்தின்கீழ் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள்.

சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்ட ஜனாதிபதி ஜே. ஆரின் இந்த நடவடிக்கைகளினால் அதிருப்தியுற்ற ஆலோசனைச் சபைத் தலைவர் ஆர். பி அமரசிங்க, "ஆலோசனைச் சபைவெறும் கண்துடைப்பே" எனக் குற்றம் சாட்டி ஆலோசனைச் சபைத்தலைவர்பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

சர்வதேச அரங்கில் தன்னை நேர்மையும்நியாயமும் உள்ளவனாகக் காட்ட முனையும் ஜே. ஆரின் கபட வேடங்களில் இதுவும் ஒன்று என்பது தற்போது வெட்டவெளிச்சமாகியுள்ளது.

# விடுதலை ....

(8ம் பக்கத் தொடர்ச்சி)

டிக் கொள்வது இல்லை. இவையெல்லாம் ஒரு புரட்சிகர இராணுவத்திற்கு தவிர்க்க முடியாத செயல்பாடுகள் என்று நியாயம் கற்பிப்பவர்கள் இவர்களே. உதிரி முதலாளித்துவ சக்திகளின் அராஜக நடவடிக்கைகளை இவர்கள் ஆதரிப்பார்கள். இதற்கு "தேசிய விடுதலைப் போராட்டத்தில் பாட்டாளிகள் தேசிய முதலாளிகளுடன் இணைந்து போராடும் போது தேசிய முதலாளிகளின் இத்தகைய அராஜகப் போக்குகளை விட்டுக் கொடுத்துப் போவது புரட்சிகர சக்திகளின் கடமை" என்றும் இல்லாவிட்டால் "அந்த ஐக்கியப்பட்ட போராட்டம் சிதைந்து போகும்" என்றும் நியாயம் கற்பிப்பார்கள், வரலாற்றில் தேசிய முதலாளித்துவ சக்திகளோடு இணைந்து புரட்சிகர சக்திகள் போராட்டத்தை முன்னெடுத்த சந்தர்ப்பங்கள் தோன்றாமலில்லை. ஆனால் அவை எப்பொழுதும் புரட்சிகர சக்திகளின் தனித்துவத்தையும் போர்க்குணாம்சத்தையும் பாதிக்காத வகையிலும் தேசிய முதலாளிகளின் பிற்போக்குத் தனங்களுக்கு எதிரானதாகவும் அந்த ஐக்கியம் விளங்கியதேயல்லாமல் தேசிய முதலாளிகளுடன் சரணாகதியடைந்து புரட்சிகர சக்திகள் ஐக்கியப்பட்டதாக புரட்சிகர வரலாறு கிடையாது. எச்சந்தர்ப்பத்திலும் புரட்சிகர சக்திகள் முதலாளித்துவ சக்திகளின் அராஜகத்தை அம்பலப்படுத்தாமல் அதன் கொடூரத்தை கண்டிக்காமல் ஐக்கியப்படவில்லை. எப்பொழுதும் இம்மாதிரி ஒத்துழைப்பின் போது 'ஐக்கியம் போராட்டம் ஐக்கியம்' என்ற கொள்கையையே புரட்சிகர சக்திகள் முன்மொழிந்தவையல்லாமல் ஐக்கியம் ஒன்றே என்ற கொள்கையை முன்வைக்கவில்லை. இது உதிரி அறிஞர்களுக்கு தெரியாமலில்லை. இவர்கள் தாம் வாங்கும் கூலிக்காகவும், புகழுக்காகவும் இக் கயமைகளை கூசாமல் செய்து கொண்டிருப்பார்கள். அத்துடன் தாபனத்தை மார்க்[illegible] என்றும் தலைவர்களை மார்க்சிசவாதிகள் என்றும் நற்சான்றிதழ் வழங்கும் பணியையும் வெகு கச்சிதமாக செய்து முடிப்பார்கள்.

தாபனத்தின் கொடூரம், அடாவடித்தனங்கள், கொலைகள் அம்பலமாகி தாபனத்தில் அழிந்து மோசமான நெருக்கடி தோன்றும் பட்சத்தில் வாக்கு சாதுரியத்தால் தாபனத்தை காப்பாற்ற இயலவில்லை என்று கண்டபின் இவ் உதிரி அறிஞர்கள் புதிய வழிகளை அறிமுகப்படுத்துவார்கள். தாமும் அந்த அநீதிகளுக்கு எதிராகப் போராடுவதாகப் பாசாங்கு செய்து, உட்கட்சிப் போராட்டம் நடத்துவதற்கு முற்போக்கு சக்திகளை தமது தலைமையில் அணிதிரள அறைகூவல் விடுத்து தாபனத்தில் ஊசலாட்டமுள்ள போராளிகளை ஒன்று திரட்டி தாபனத்திற்கு முட்டுக் கொடுப்பதும் இந்த உதிரி அறிஞர்களின் பணியாகும். தாபனத்தில் அத்தகைய துயரங்கள் மேலும் தொடராது தடுக்க புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்துகின்றோம், கட்சியைப் பலப்படுத்துகின்றோம், என்று கூறி புரட்சிகர கட்சியை உருவாக்குகின்றோம் என்ற போர்வையில் அராஜகப் போக்கிற்கு ஒரு [illegible] வடிவம் கொடுப்பார்கள். இவர்கள் உருவாக்கும் கட்சி இதுவரை தனமனிதர்கள் செய்த அராஜக நடவடிக்கைகளை நியாயப் படுத்தவும் வக்காலத்து வாங்குவதற்கும் ஏற்ற வகையில் பெரும்பான்மைப்பலம் அராஜக வாதிகள் கையிலேயே குவிந்திருக்கும். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இந்த உதிரி அறிஞர்கள் மோசமான எதிர்ப்புரட்சிகர நடவடிக்கைகளை மறைமுகமாகச் செய்து வருகின்றார்கள்.

சமூகத்தின் பல்வேறு வர்க்கங்களிலிருந்தும் கழிக்கப்பட்டு அல்லது உதிர்ந்து போய் வாழ்க்கையின் அடிமட்டத்தில் குப்பையில் கொண்டு போய் கொட்டப்பட்டு கசடுகளாக அமைந்து விட்ட மக்கள் தொகுதியான பேர்வழிகளே இந்த உதிரிகளாகும்.

இவர்களை வசதிக்காக வேண்டி தனித்தனியாக நோக்கினாலும் இவர்கள் ஒருபொது வகுப்பாகவே செயல்படுகின்றார்கள் என்பதை மறக்கக் கூடாது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இந்த உதிரிகள் கீழணி முதல் தலைமைவரை ஊடுருவி வருகின்றார்கள். இவ்வுதிரிகள் பரந்து காணப்படுவது முற்போக்கு சக்திகள் முகம் கொடுக்கும் பாரிய பிரச்சனையாக இருக்கிறது. இதனை வெல்வதற்கு தாபனங்கள் புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தின் தன்மைகளை சுவீகாரம் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அதன் மூலம் போராட்டத்தை வீரியமும் சாதுரியமும் நிறைந்ததாக மாற்றலாம்.

## சமூகச் சீரழிவு ...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்பது என்பதற்கு அர்த்தம் விபச்சாரத்தை நியாயமாக்குவதாக இருக்க முடியாது. இவ்வாறான கடைக்கோடித்தனமான அணுகுமுறைகள் பெண் விடுதலை பற்றியும், புதுமைப் பெண் பற்றியும் சமூகத்தில் நாம் ஏற்படுத்த விரும்பும் கருத்துக்களுக்கு மாறான அபிப்பிராயங்களையே உருவாக்கும் என்பதை கவனிக்கத் தவறக் கூடாது.

# பெண்ணென்று....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அவர்களெல்லோரையும் போல நீயும் அதில் தோற்றுப்போனாய். உண்மைக்கு அணைபோட யாராலும் முடியாது. உண்மைக்கு சாட்சி சொல்ல கிளர்ந்தெழுந்த மக்களின் முன்னால் நீயும் உன் கூட்டத்தோரும் அவமானப்பட்டு தலைகவிழ்ந்துகொண்டீர்கள் உண்மையை ஒத்துக்கொண்டாய். ஆனாலும் உண்மையில் கயமை புரிந்தவர்களை அம்பலமாக்காமல் இடைநடுவில் ஓடி ஒழிந்தாய்!

உண்மைகள் அம்பலத்துக்கு வந்தால் உனக்கும் கழகத்திற்கும் பாதிப்பென்று பாதியிலே உண்மைகளை மூடி மறைத்தாய். அந்தக் காமுகர்கள்' கொலை வெறியர்கள், மனித விரோத சக்திகள் எல்லாம் கழகத்தினுள்ளேயே இருப்பதை நீ அறியாதது அல்ல. அந்தக் கயவர்களை நீயே பாதுகாத்துப் பேணுவதையும் நாம் அறியாமலில்லை! தோழி!

இப்பொழுதும் உன் வாயால் மனித உரிமைகள் பற்றியும் பெண் விடுதலை பற்றியும் கூசாமல் பிரஸ்தாபிக்கின்றாயே. ஏதும்அறியாத பெண் கூட்டம், விமோசனத்திற்கு வழிகாட்டுவதாகக் கூறி அழைத்துச் செல்கின்றாயே! எங்கே! உன் சீரழிந்தவாழ்வின் கொடூரம் உன்னோடு மறைந்துவிடக் கூடாதா? அதற்கும் வாரிசு வேண்டுமா?

உட்கட்சிப் போராட்டம் நடத்துகிறோம். மகளிருக்கு நேர்ந்த அவமதிப்புகள் பலாத்காரங்கள் குறித்து ஆராய விசாரணை செய்கிறோம் என்றெல்லாம் கூறினாயே. அந்த விசாரணை என்னவாயிற்று? முடிவு திருப்தியாக இல்லையா? அதனால்தான் இந்த மௌனமா!

ஆனால் ஒன்று!

எனக்கு விடுதலை உணர்வு ஊட்டியவள் நீ தான் என்ற கௌரவத்தை உனக்கு இப்போதும் தருகிறேன், அதே போல நான் மேற்கொண்டு செல்லவேண்டிய பாதையையும் உன் சீரழிந்த வாழ்வு காட்டி நிற்கின்றது என்ற உண்மையையும் கூறிவைக்கிறேன். இன்னும் உன்வேடம் புரியாமல் தம் வாழ்வைப் பணயம் வைக்கும் அப்பாவித் தோழியருக்காக கண்ணீர் சிந்துகிறேன்.

அவர்களின் வெள்ளை உள்ளத்தை உன் சாமர்த்தியத்தால் சுலபமாக வென்று விட்டாய்! கபடமும் வஞ்சனையும் நீண்ட காலத்திற்கு மூடிவைக்கும் விடயங்கள் அல்லவே. உனதும் கழகத்தினதும் உண்மை சொரூபத்தை அவர்களும் விரைவில் தரிசிக்கச் செய்வார்கள்! அப்போது அவர்கள் செல்லப்போகும் பாதைக்கு முன்னோடியாக இப்போதே நான் வழி சமைக்கிறேன்,

கல்லும் முள்ளும் நிறைந்த இந்தக் கடினமான பாதை தளராத உள்ளமும், நெஞ்சுறுதியும்,நேர்மையும்கொண்டவர்களுக்கு ஒரு போதும் சிரமமாக இருப்பதில்லை.

இறுதியாக ஒன்று!

கற்பின் வலிமையைக் காட்ட ஒரு பெண் தீயால் மதுரையை எரித்தாளாம். இன்னொரு பெண் தீயிலே குளித்து வந்தாளாம்.

இவை புராணக் கதைகள்.

இதோ!

உண்மையை எடுத்துக் காட்ட நாங்கள் தீப்பொறியை கையிலெடுத்திருக்கிறோம். பொய்யிலே புரளும் உன்னால் என்னை முகம் கொடுக்க முடிகிறதா?

இப்படிக்கு,

உனது தோழி.

# போராடுவதே வழியெனக் கொண்டோம்

காலடி ஒவ்வோரடியும்
பதித்த சுவட்டிலும்
இரத்தம் உறைந்தது:
நடந்த கதையை மறந்து விட்டோமா?
கடந்த பாதையை மறந்து விட்டோமா?
மாவட்ட சபைகள் மாகாண சபைகள்
மாவட்ட அபிவிருத்திச் சபைகள் இப்படி எத்தனை
வந்த போதும் இழந்த நம் இறைமையை
மீட்டிட முடியுமா?
இறந்த நம் தோழர்களின், மக்களின்
கேள்விகளுக்கு என்ன பதில்? என்ன பதில்?
எங்கள் தேசத்து நகரங்கள்
எரிந்த தீச்சுவாலைகள்
அணைந்து போக முன்னரே
எங்கள் தெருக்களில் படர்ந்த
எம்மவர் குருதியின் சுவடுகள்
உறைந்து போக முன்னரே
கொலை செய்யப்பட்டு
வீசியெறியப்பட்ட
எங்கள் தேசத்து இளைஞர்களின்
சடலங்கள் மீது நடந்து
பேர்லின் விமான நிலையத்தில்
வந்து இறங்கும் அகதிகளின்
கூட்டத்தில்
என்னைத் தேடி அலையாதே.
இறந்து போன நம்மக்களின்
கொலையுண்ட நம் இளைஞர்களின்
சிதைந்த நம் பெண்களின்
குரல்கள்
வானிலிருந்து இடியென முழங்குகிறதே.
கேட்கவில்லையா உமக்கெல்லாம்?
மரணத்தை அஞ்சும் வலியை இழந்தோம்
துயரத்தை பலமாய் மாற்றவும் அறிந்தோம்,
போராடுவதே வழியெனக் கொண்டோம்;
திடீரென ஏறுகிற சமரச மாயையை
தெருவிலே எமது தலைவிதி உள்ளதை
நெருப்பிலே நமது நாட்கள் நகர்வதை
அந்நியன் எடுக்கும் முடிவை ஏற்பதை
அனுமதிக்கிறாயா?
"இல்லை"
எழுந்து வெளியில் வா
தெருவில் இறங்கு!

(போர் நிறுத்தமும் பூட்டான் பேச்சு வார்த்தையும் பற்றிய யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்களின் வீதி நாடகத்திலிருந்து)

www.tamilarangam.net


# சிறிலங்கா அரச இயந்திரமும் சிங்கள மக்களும்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அண்மைக்காலங்களில் நடந்த நிகழ்வுகள் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் சிறிலங்கா அரச இயந்திரம் பற்றிய சிங்கள மக்கள் பற்றிய எமது கருத்துப் படிவங்களை தெளிவாகவரையறுத்துக்கொள்ளப்படவேண்டிய தேவையை முன்வைத்துள்ளன. இத்தகைய நிகழ்வுகளுள் குறிப்பிடத்தக்கவையாக அமைந்தவை வருமாறு

நிக்கவரட்டிய பொலிஸ் நிலையம் மற்றும் மக்கள் வங்கி மீதான தாக்குதல்களையடுத்து தாக்குதலுக்கு உரிமைகோரி PLOT இன் படைத்துறை செயலர் கண்ணன் விடுத்த அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது.

"சிங்கள இராணுவ, காவல் மற்றும் அரச படைகளில் பணியாற்றும் தோழர்கள் சிறிலங்காவில் வாழக்கூடிய பாட்டாளிகளின் பிள்ளைகள் என்பதை நாம் மறந்துவிடவில்லை. இத்தாக்குதல் சம்பவத்தில் காவல்நிலையத்தைச் சேர்ந்த ஒரு தோழர் — பாட்டாளியின் மகன் தவிர்க்கமுடியாத நிலையில் இறந்த [illegible]க்குகிறோம். அவர் எந்த மொழி பேசுபவராக இருந்தாலும் அவர் எமது எதிரியின் எதிரி - எமது சக தோழர் என்பதை நாம் மறந்துவிடவில்லை."

PLOT இனுள் ஓங்கிவரும் அராஜக நடவடிக்கைகளால் அதிருப்தியுற்று PLOT இலிருந்து வெளியேறிய முன்னணி தோழர்களுக்கு அவதூறு கற்பிக்கும் நோக்கில் PLOT இன் தலைமையால் அச்சிட்டு வெளியிடப்பட்ட "கழக அமைப்பை இறுக்கமாக்கும் நிலையில் சந்தர்ப்பவாத பிற்போக்கு சக்திகளின் வெளியேற்றம் தவிர்க்க முடியாததே" என்ற அறிக்கையில், "தோழர் சந்திரன் கெரில்லாப் போராட்டம் என்று கூறிக்கொண்டு ஒட்டிசுட்டான் காவல் நிலைய ஜீப் காட்டுப் பாதையில் செல்கையில் தகர்த்து உள்ளிருந்த நிலையப் பொறுப்பாளர் உயர்திரு சுந்தரலிங்கம் அவர்களையும் ஏனையோரையும் காட்டுமிராண்டித்தனமாகக் கொன்றார்" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அநுராதபுரத்தில் சிங்கள மக்கள்மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பலர்படுகாயம் அடைந்தனர். இத்தாக்குதலை தாம் செய்யவில்லை என அனைத்து தமிழீழ விடுதலைப் போராட்ட அமைப்புகளும் மறுப்புத் தெரிவித்ததோடு கண்டனமும் செய்திருந்தாலும், பழி தமிழீழ விடுதலைப் போராட்ட அமைப்புகளிலேயே விழுந்திருக்கிறது. இந்த மூன்று நிகழ்வுகளையும் கூர்ந்து அவதானிக்கும் ஒவ்வொருவரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இலக்கு பற்றிய கேள்விகளை எழுப்புவது நியாயமானதே.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எமது எதிரி யார்?

"சிறிலங்கா அரச இயந்திரமே எமது எதிரி" என ஒவ்வொரு தமிழீழ விடுதலைப்போராட்ட அமைப்பும் கிளிப்பிள்ளைபோல ஒப்புவிக்கின்றது.

அப்படியெனில்,

சிறிலங்கா இராணுவத்தினர், பொலிசார் யார்?

சிங்கள மக்கள் யார்?

இவைதான் இன்றுசர்ச்சைக்குரிய பிரச்சனைகளாகும்.

மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள PLOTன் அறிக்கைகளை பார்க்கும்போது PLOT போன்ற இயக்கங்கள் சிறிலங்கா அரசாங்கத்திலுள்ள பாராளுமன்ற அரசியல்வாதிகளையேதான் சிறிலங்கா அரச இயந்திரமாகக் கருதுகின்றார்கள் எனத் தெரிகின்றது. ஆனால் உண்மையில் அரச இயந்திரம் என்பது அரசின் சட்டவாக்க [illegible]றம், சட்டங்களை அமுல்படுத்தும் நிர்வாக அமைப்பு அமுல்படுத்தப்படுவதை உறுதி செய்யும் இராணுவம், பொலிசார், நீதிமன்றம், சிறைச்சாலை போன்ற அனைத்தையும் உள்ளடக்கியதேயாகும். அரசாங்க அமைச்சர்களும் எம்பிக்களும் மட்டும்தான் அரச இயந்திரமென சித்தரிக்க முயலுவதும், அரச ஆயுதப் படைகளை அரச இயந்திரத்தின் ஓர் அங்கமல்ல எனக் கருதுவதும் தவறான, ஆபத்தான பார்வைகளேயாகும்.

சமுதாயத்தில் முரண்பட்ட நோக்குள்ள வர்க்கங்கள் தோன்றும்போது, சுரண்டும் வர்க்கங்கள் தோன்றும்போது, சுரண்டும் வர்க்கங்கள் தமது நலன்களை பாதுகாப்பதற்காகவும், சுரண்டப்பட்ட வர்க்கங்களின் போராட்டங்களை நசுக்குவதற்காகவும் சமுதாயத்திலிருந்து ஆயுதமேந்திய குழுக்களை உருவாக்கின. சமுதாயத்தில் அடிமட்டத்தை சேர்ந்த இளைஞர்கள் வறுமையின் காரணமாக தமது வயிற்றுப் பிழைப்புக்காகவே அரச இராணுவத்தில் சேர்ந்துகொள்கிறார்கள் என்ற போதும் இராணுவத்தின் தாபன அமைப்பும் அனைத்து கட்டளைகளுக்கும் கீழ்ப்படியும் ஒழுங்கு விதிகளும் ஆளும் வர்க்கங்களை தலைமையாகக் கொண்டிருப்பதுமான முதலாளித்துவ இராணுவ அமைப்பில் இவர்கள் தம் வர்க்க நலன்களை பாதுகாப்பதிலிருந்து தவிர்த்து ஆளும் வர்க்கத்திற்கு சேவை செய்பவர்களாக முற்றிலும் மாற்றியமைத்துவிடுகிறது,

ஆகவே அரச இராணுவம் என்பது சீருடையிலுள்ள விவசாயிகள், தொழிலாளிகள் என்றபோதும்கூட அது ஆளும் வர்க்க நலன்களை காப்பதற்காக உருவாக்கப்பட்டு செயற்பட்டுவரும் அமைப்பாகும். இதனையே லெனின் "முதலாளித்துவ அமைப்பில் நிலையான இராணுவமானது மக்களின் மூலதனத்திற்கு எதிராகவும், விடுதலைக்கான போராட்டத்தை நசுக்குவதில் பிற்போக்குவாதிகளின் கருவியும் ஆகும்" என்றார். மேலும் இராணுவத்தின் அரசியல் தன்மை பற்றி லெனின் குறிப்பிடுகையில் "அரசியலுக்கு அப்பாற்பட்ட இராணுவம்என்பது கொச்சைத்தனமானதும் கபடத்தனமானதுமான பொய்யாகும். இது பூர்சுவா வர்க்கத்தின் உண்மைச் சொரூபத்தை மறைக்கும் முயற்சியாகும்" என்றார்.

இராணுவமயமாக்கலானதுமுதலாளித்துவ அரச இயந்திரத்தின் பிரதான உபகரணமாகப் பங்காற்றி புரட்சிகர போராட்டங்களுக்கு தடையாக அமைந்துவிடுகிறது. ஆயினும் முதலாளித்துவ இராணுவ வீரர்களிடையே வீரர்களுக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுதல், உயரதிகாரிகளின் மனிதநேயமற்ற போக்கு, வீரர்களை அடிமைகளாகக் கருதும் மனோபாவம், படுமோசமான தண்டனை வழங்கும் நடவடிக்கைகள் போன்ற காரணங்களால் அமைதியின்மையைதோற்றுவித்து அவர்களது வர்க்க உணர்வுகளைத் தூண்டுகின்றன. புரட்சிகர போராட்டத்தை முன்னெடுக்கும் சக்திகள் தங்களுடைய போராட்டத்தின் அர்த்தத்தை முதலாளித்துவ இராணுவமும் புரிந்துகொள்ளச்செய்து அவர்களை வென்றெடுப்பதன் மூலம் புரட்சிகர உணர்வு கொண்ட இராணுவமாக மாற்றமுடியும்.

தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் போராட்டத்தை நசுக்குவதற்காக இராணுவம் அனுப்பப்படும்போது தமது சகோதரர்களுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எதிராகவே தாங்கள் ஆயுதமேந்த வேண்டிய நிலை ஏற்படும்போது புரட்சிகர உணர்வு பெற்ற இராணுவத்தினர் தமது நிலைப்பாட்டை உறுதியாக எடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. பெரும்பான்மையான இராணுவத்தினர் பரந்துபட்ட, ஒடுக்கப்பட்ட சுரண்டப்பட்ட தமது சொந்த மக்களின் நலன்களுடன் ஒன்றுபட்டு ஆளும் வர்க்க நலன்களுடன் முரண்படும்போது முதலாளித்துவ இராணுவத்தில் பெரும்பான்மையினர் புரட்சியின்பால் சேர்வதற்கு வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

தமிழீழப் போராட்டத்தின் ஆரம்பகட்டங்களில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வேரோடு கிள்ளியெறிய சிறிலங்கா அரசு தமிழ் பொலிசாரையும், தமிழ்உளவாளிகளையுமே பயன்படுத்தி ஓரளவு வெற்றிபெற்றது. இத்தகைய தடைகளை எதிர்கொள்வதற்காகவிடுதலை இயக்கங்கள் ஆரம்பநிலையில் பல களையெடுப்புக்களை செய்யவேண்டியிருந்தது. பஸ்தியாம்பிள்ளை போன்ற மோசமான பொலிஸ் உளவு அதிகாரிகள் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்தே விடுதலை இயக்கங்கள் அரசின் வேட்டையாடுதலுக்கு தப்பி வளர்ந்து இன்றைய நிலையை அடையக்கூடியதாகவிருந்தது,

இன்றுநிலைமைஎன்ன?

இன்று சிறிலங்கா ஆயுதப்படைகளில் கிட்டத்தட்ட முழுப்பேருமே சிங்களவராவர். இவர்களில் பெரும்பான்மையினர் சிங்கள இனவாத உணர்வுகளுக்குள் மூழ்கியிருக்கின்றார்கள், தாம் தமது இனத்தைக் காப்பவர்கள் எனக் கருதும் இவர்கள் பல சந்தர்ப்பங்களில் தமது தலைமையின் கட்டுப்பாடுகளையும் மீறி தமிழ் மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமாக படுகொலைகளைக் கட்டவிழ்த்துவிடுவதை நாம் அடிக்கடி காண்கின்றோம்.

மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினர் தமிழ் மக்கள் மீது மோசமாகத் தாக்குதல் நடாத்தியபோது சிறிலங்கா இராணுவத்தினர்மன்னார் மாவட்ட கமாண்டர் கேணல் மார்க் பிலிப் இராணுவத்தினரால் அறைக்குள் வைத்து பூட்டப்பட்டதுடன் சிப்பாய்களைத் தடுத்து நிறுத்தினால் கொல்லப்படுவார் .என எச்சரிக்கப்பட்டமை, முள்ளியவளையில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த 15 தமிழ்மக்களை சிறிலங்கா இராணுவம் சுட்டுக்கொன்றபோது அவர்களைத் தடுத்து நிறுத்த முயன்ற இராணுவ வீரர் ஒருவர் சக இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டமை போன்ற அண்மைய நிகழ்வுகள் இன்று சிறிலங்கா இராணுவமானது எவ்வளவுதூரம் இனவாதச் சேற்றினுள் மூழ்கியிருக்கின்றது என்பதைக் காட்டி நிற்கின்றன.

பெரும்பாலான சிங்கள முற்போக்கு சக்திகள்கூட இனவாதச் சேற்றினுள் மூழ்கியிருக்கும் இன்றைய நிலையில் சிறிலங்கா ஆயுதப்படையை தமிழீழப் போராட்டத்தின்பால் வென்றெடுக்க முடியுமென்பது எவ்வளவுதூரம் சாத்தியமானது என்பது கேள்விக்குரியதே. சிறிலங்கா அரசின் ஆயுதப்படைகள், இன்றைய சிறிலங்கா அரசின்மிகநம்பிக்கைக்குரிய கருவிகளாக இருந்துவருகின்றன என்பதே யதார்த்த உண்மை நிலைமைகள். உண்மையில் இவ்வாறிருக்க "சிறிலங்கா ஆயுதப்படைகளை எமது எதிரியின் எதிரி - எமது சக தோழர்கள்" என்று கூறுவது எவ்வளவு அபத்தமானது, தவறானது என்பதை நாம்சரிவரக்கண்டுகொள்ளவேண்டும்.

இவ்வாறான முட்டாள்தனமான புரட்சிகரக் கோஷங்கள்(?) மூலம் சிங்கள மக்கள் மற்றும் சிறிலங்கா இராணுவத்தின் மத்தியில் பலரைத் தாம் வென்றெடுத்திருப்பதாக வெளியுலகத்தினை நம்பச்செய்யமுடியும் எனக் கருதியே ஒரு ஏமாற்று முயற்சியாக படைத்துறைச் செயலர் கண்ணன் இதனை வெளியிட்டிருக்கின்றார். இதிலும் ஒருபடி மேலாகச்சென்று PLOT இன் இராணுவ நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட ஒரு தமிழ் பொலிஸ் அதிகாரியை உயர்திரு என அழைப்பதை என்னவென்று கூறுவது? இத்தகைய இவர்களது குருட்டுத்தனமான கருத்துக்கள் இவர்களுக்கு அரச இயந்திரம் பற்றியும்எமது போராட்டம்பற்றியும் எமது எதிரியார்என்பது பற்றியும் சரியான தெளிவான பார்வை கிடையாது என்பதையே காட்டி நிற்கின்றன.

இன்று சிறிலங்கா அரசின் அடக்குமுறை இயந்திரமான ஆயுதப்படைகளில் பணியாற்றுபவர்களையும் தமிழ் பகுதிகளில் ஆயுதபாணிகளாக குடியேற்றப்பட்ட ஆக்கிரமிப்பாளர்களையும், சிறிலங்கா அரசிடமிருந்து ஆயுதங்களைப் பெற்று "ஊர்காவல்படை" என்னும் பெயரில் தமிழ்மக்கள் மீது தாக்குதல் நடத்தும் காடையர்களையும் தவிர்ந்தஏனையசிங்கள பொது மக்களை என்னவென்று கருதுவது?

பெரும்பான்மையான சிங்கள மக்கள் சிங்களப் பேரினவாதத்திற்கு பலியாகியுள்ளார்கள் என்பதும் ஐக்கிய தேசியக்கட்சியையே ஆதரித்து அதனைத் தொடர்ந்தும் ஆட்சியதிகாரத்தில் அமர்த்தியவர்கள்என்பதும் உண்மையே. ஆனால் எமது தேசிய விடுதலைப் போராட்டம் என்பது உலகப் புரட்சியின் ஒரு அம்சம் என்பது மட்டுமல்ல இது இலங்கையின் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வும் சிறிலங்காவில் புரட்சி ஏற்பட மிகவும் சாதகமான விடயமும் கூட என்பதனை நாம் மறந்துவிடலாகாது.

(9-ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வரலாற்றின் திருப்புமுனையில்

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

### குள்ள நரிகளும் கவரிமான்களும்

ஜூன் 22, 1985 அன்று கிளிநொச்சி மாவட்டத்தில் குஞ்சுப்பரந்தன் என்னுமிடத்தில் சைக்கிள் ஒன்று களவு போனது தொடர்பாக விசாரிப்பதாகக் கூறி சிவகுமாரன் என்ற இளைஞரை PLOT இராணுவம் கடத்திச் சென்றது மறுநாள் PLOT இராணுவம்பல அடிகாயங்களுடன் அவ்விளைஞரைக் கொண்டுவந்து அவரது வீட்டில் இறக்கிவிட்டு அவ்விளைஞரின் தந்தையான கிருஷ்ணசாமி என்பவரை மோசமாகத் தாக்கியதுடன் இளைஞரின் தாய் மற்றும் மூன்று சகோதரிகளையும் கேவலமான முறையில் தூஷண வார்த்தைகளால் தூற்றிவிட்டுச் சென்றனர்.

இச்சம்பவத்திறல் மிகவும் மனமுடைந்து போன அக்குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் ஒன்றாக நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டனர். தற்கொலை செய்தவர்களின் விபரம் வருமாறு:

*சங்கரப்பிள்ளை கிருஷ்ணசாமி* (வயது 55), அவரது மனைவி *ராணி* (வயது 40), அவரது பிள்ளைகள் *சிவகுமாரன்* (வயது 22), *சோதி* (வயது 19), *செல்லம்மா* (வயது 17), *சிவகலா* (வயது 15).

தற்கொலை செய்ய முன்னர் இவர்கள் எழுதி வைத்த கடைசிக் கடிதத்தில் தாங்கள் நிரபராதிகள் என்றும் அநியாயமாக நம்மீது அவதூறு பரப்பிய இயக்கத்தின் கொடுமை தாங்காமல் தற்கொலை செய்வதாகவும் குறிப்பிட்டிருந்தார்கள்.

### சுலபமான தீர்வு

மே 30,1985 அன்று முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தணுக்காய் பகுதியில் தமிழீழ விடுதலை இராணுவம் (TELA) ராஜன் குழுவைச் சேர்ந்த 8 போராளிகள் (PLOT) இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இப்படு கொலைகள் தமிழீழ விடுதலைத் தாகம் கொண்ட அனைவரையும் திடுக்கிடச் செய்திருக்கிறது. இதுவரை வேறு எந்த தமிழீழ விடுதலை அமைப்பும் சக விடுதலை இயக்கப் போராளிகளை PLOT படுகொலை செய்ததைவிற்கு செய்தது கிடையாது.

### இது ஒருபுறமிருக்க,

இப்படுகொலை நடந்ததற்கு 2மாதங்களுக்கு முன்பு ENLF (TELO, EROS, EPRLF, கூட்டமைப்பு) PLOT செயலதிபர் உமாமகேஸ்வரனிடம் பின்வருமாறு கூறியிருந்தது. "TELA இப்பொழுது இரண்டு குழுக்களாகப் பிரிந்துள்ளது. இதில் ஒரு குழு PLOT உடன் இருக்கின்றது. இந்த இரு குழுக்களில் எதனை TELA என ஏற்றுக்கொள்வதில் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் எந்தக் குழுவை TELA என அங்கீகரிப்பது என்பதில் அவசரப்படக் கூடாது" இது குறித்து எதுவும்தெரிவிக்க முடியாது திக்குமுக்காடிய உமாமகேஸ்வரன் இப்போது TELA ராஜன் குழுவினரை படுகொலை செய்வதன் மூலம் இப்பிரச்சனைக்கு சுலபமாகத்தீர்வு கண்டுள்ளார்.

### அவர்கள் எந்தப் பக்கம்

PLOT இலிருந்து வெளியேறியவர்களிலிருந்து வெளியேறியோர் என்ற தலைப்பில் கடந்த ஏப்ரல் மாதம் யாழ்நகரில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை ஒட்டியவர்கள் PLOT என இப்பொழுது தெரியவந்துள்ளது. இந்தச் சுவரொட்டிகளில், PLOT இலிருந்து வெளியேறிய இருதோழர்கள்வெளியேறியவர்களோடு இல்லை என்றுகூறப்பட்டிருந்தது. இந்த இரு தோழர்களும் இப்பொழுதும் PLOT இலிருந்து. வெளியேறியவர்களுடனும். அவர்களுக்கு ஆதரவாகவும் இருக்கிறார்கள் என்று கூறி வைக்கிறோம் இவர்கள் நலன் குறித்து PLOT அஞ்சத் தேவையில்லை.

இவ்விரு தோழர்களதும் உண்மையான பெயர் விபரங்களை சுவரொட்டிகளில் பகிரங்கமாக வெளியிடுவதன் மூலம் PLOT எந்தப் பக்கத்திற்கு சேவை செய்கிறது என்பதையும் இனம் காட்டியுள்ளது.

### ஊருக்கடி உபதேசம் உனக்கல்ல

மே 29, 1985 அன்று "படுகொலைகள் தொடர்கின்றன. பொதுமக்களே தடுப்பதற்கு திரண்டு வாரீர்" என்ற தலைப்பில் PLOT ல் இருந்து வெளியேறியவர்களால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இப்பிரசுரங்களை விநியோகித்த PLOT இலிருந்து வெளியேறிய இரு தோழர்களை PLOT ஐச் சேர்ந்த இருவர் ஆயுதங்கள் சகிதம் வந்து தடுக்க முயன்று கலாட்டா செய்ததோடு பின்வரும் மணியான வாசகங்களையும் கூறினார்கள்.

"PLOTல் ஜனநாயகம் இல்லை என்றீர்கள். PLOTல் ஜனநாயகம் இருப்பதால்தான் உங்களை உயிருடன் விட்டு வைத்திருக்கின்றோம்." "உங்கள் கல்லறைகள் பேசும் என்றா கூறுகிறீர்கள். கல்லறைக்குக் கூட வெடிகுண்டு வைப்போம். தெரியுமா"

"PLOT ஐப் பற்றி விமர்சித்து இனியும் ஏதாவது வெளியிட்டால் உங்களையும் புதைத்து விடுவோம். இதுதான் இறுதி எச்சரிக்கை" இவர்கள் போன பின்பு தொடர்ந்தும் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. "நாம் விமர்சனத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். விமர்சனம் தவிர்ந்த வேறெந்த வழியிலும் சக விடுதலை ஸ்தாபனங்களை அணுகுவதில்லை" என்று பிரமாதமாக பீற்றிக் கொள்ளும் தமிழீழத்தின் குரலும், புதிய பாதையும் இச்சம்பவம் குறித்து என்ன கூறப்போகிறார்கள்.

### எய்தவன் இருக்க

ஆகஸ்ட் 17, 1985 அன்று புன்னாலைக்கட்டுவனில் PLOT இனது இராணுவத்தைச் சேர்ந்த நடேசன் (யமஹா), பரகராமன் ஆகிய இருவருக்கு மரண தண்டனைகளை பகிரங்கமாக நிறைவேற்றியது. இம் மரணதண்டனைகளுக்கு PLOT பின்வரும் காரணங்களைத் தெரிவித்திருந்தது.

1. ஜீவகுமார் என்ற தோழரை பயிற்சி முகாமில் அடித்துக் கொலை செய்தமை.
2. முகாம் தோழர்களை சித்திரவதை செய்தமை.
3. அதிகார துஷ்பிரயோகம்.

இம் மரணதண்டனைகள் மூலம் PLOT இந்தியாவில் மட்டுமன்றி தமிழீழத்திலும் தனது பயிற்சி முகாம்களில் சித்திரவதைகள் நடைபெறுவதை ஒப்புக்கொள்கின்றார்கள். இம் மரண தண்டனைகள் பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளன. இம்மரணதண்டனைகள் மூலம் PLOT தம் மத்தியிலான அராஜகப் போக்குகளை தற்போது சீர்செய்ய ஆரம்பித்திருப்பதாக பொது மக்களை நம்பப் பண்ணுவதாக மனப்பால் குடிக்கலாம். இந்நடவடிக்கைகள் சேற்றில் மூழ்கிக் கொண்டிருப்பவன் தனது மூக்கிலுள்ள அழுக்கைத் துடைத்துவிடும் கம்பீரத்தனமேயன்றி வேறல்ல.

பயிற்சி முகாம்களை வதைமுகாம்களாக மாற்றும் PLOTன் நடைமுறைகள் ஒழிக்கப்படாதவரை இம் மரண தண்டனைகள் எல்லாம் வெறும் கண்துடைப்புதான்.

# கல்லறைகள் பேசுகின்றன...

(சென்ற இதழ் தொடர்ச்சி)

தோழர்கள் சிவனேஸ்வரன் (உடுவில்) அகிலன் (சுன்னாகம்) ஆகியோருக்கு நடந்த சித்திரவதைகளை நேரில் கண்ட ஒரு தோழர் தெரிவித்ததாவது:

"அக்டோபர், 84 இன் நடுப்பகுதியில் ஒருநாள் இரவு பன்னிரண்டு மணியளவில் மஞ்சள் நிற டாட்டா பென்ஸ் லொறி ஒன்றில் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டு கால்களும்கட்டப்பட்டு முகங்களையும் மூடிக்கட்டியபடி சிவனேஸ்வரன், அகிலன் மற்றும் இன்னொருவரையும் விசேஷ சித்திரவதை முகாமுக்கு PLOT இன் உளவுப்படைபொறுப்பாளர் கந்தசாமி கொண்டுவந்து சேர்த்தார். அங்கு சிவனேஸ்வரனது கைகள் கம்பம் ஒன்றுடன் பின்புறமாகக் கட்டி கால்களை மற்றொரு கம்பத்துடன் இழுத்துக் கட்டினார்கள். சிவனேஸ்வரனுக்கு செய்யப்பட்ட சித்திரவதைகள் மிகக் கொடூரமானவை. அவரை எக்காரணம் கொண்டும் அக்கொட்டிலில் இருந்து வெளியே கொண்டுவரவில்லை.

சிவனேஸ்வரன் கொண்டுவரப்பட்டவுடன் அதிகாலையில் அருகிலிருந்த பயிற்சி முகாம் முகாம் "B" யின் பொறுப்பாளர் பெரிய சவுக்குக் கட்டை சகிதம் சென்று சிவனேஸ்வரனை மோசமாகத் தாக்கினார். அவர் "நீ பெரியய்யாவை யாரென்று நினைத்தாய்" என்று கேட்டுக்கேட்டுசிவனேஸ்வரனுக்கு சவுக்கு கட்டையால் அடித்தார்.'ஐயோ' அடிக்காதையடா. என்னோடு எவ்வளவு தூரம் பழகி விட்டு இப்படியெல்லாம் சித்திரவதை செய்கிறாயே" என்று சிவனேஸ்வரன் அழுதார்.

சிவனேஸ்வரன் தவறுதலாகத் தன்னை விசாரிப்பவர்களை அண்ணை தோழர் என்று அழைத்து விட்டால் போதும்மோசமாக அதற்கு தாக்கப்பட்டார், 177 சயர் றைபிளினால் உடம்பு முழுவதும் சுடப்பட்டார். தோளுக்கு கீழ தைத்திருந்த எயார் றைபிள் பெலட்டை பிளேட்டினால் கீறி வெளியே எடுத்துவிட்டு அக்காயங்களின்மேல் உப்பும் மிளகாய் தூளும் கலந்து நீரை ஊற்றி சித்திரவதை செய்தனர். சிறிதளவு ஜெலிக்நைற்றை கொட்டிலுள் வெடிக்க வைத்து அதிர்ச்சியாலும் வெடிப்புகையாலும் சிவனேஸ்வரனை திணற வைத்தார்கள். PLOTன் உளவுப்படையில் உதவிப் பொறுப்பாளர் வாமதேவன் சிவனேஸ்வரனை விசாரிக்க வந்தபோதெல்லாம் 'இந்தா உன்னைத் தட்டுகிறேன்' என்று கூறியபடி சிவனேஸ்வரனின் தலைக்கு மேலாக உரசிக் கொண்டு செல்லும்படி. '22 ரிவோல்வரினால் சுட்டு சிவனேஸ்வரனை மிகவும் பீதியடையச் செய்தார். அருகில் இருந்தபயிற்சி முகாம் "B" யின் சி ஐ ஏ. உளவாளிகள் மூவரைக்கொண்டுவந்திருப்பதாகக் கதை பரப்பினார்கள்.

அகிலனைக் கொண்டு வந்தவுடன் உடனடியாக அருகிலிருந்த பயிற்சி முகாம் "B" யின் களஞ்சியத்தில் அடைத்து வைத்திருந்தனர். பின்னர் விசேஷ சித்திரவதை முகாமில் தனியான கொட்டிலுக்கு மாற்றப்பட்டார். அவர் மலசலங் கழிக்க கொட்டிலுக்கு வெளியே காவலுடன் கொண்டு வரப்படுவார். இவருக்கும் மோசமான சித்திரவதைகள் நடந்தன. சிவனேஸ்வரன் அகிலன் ஆகியோரிடம் "உங்களிடமிருந்த நாற்பதினாயிரம் ரூபாவும் யார் எதற்காகத் தந்தார்கள்? உங்களுக்கு ஏது ஒட்டமற்றிக் பிஸ்டல்? எங்கே வாங்கினீர்கள்? உங்களுக்கும் அனவெட்டி பாப்பாவுக்கும் LTTE யுடன் என்ன தொடர்பு? எனப் பல கேள்விகள் கேட்டுக் கடுமையாகச் சித்திரவதைகள் செய்தனர் அக்டோபர் 31 தேதிக்குப் பின்னர் இவர்களைஉயிருடன் இருப்பதாக நான் அறியவில்லை.

(9ம் பக்கம் பார்க்க)

## தொடரும் போராட்டங்கள்..



சிறீலங்கா அரசின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி 18 மாதங்களுக்கு மேலாகியும் விசாரணையோ விடுதலையோ இன்றி சித்திரவதைக்குள்ளாகிக் கொண்டும் கொல்லப்பட்டும் வரும் அநீதிக்கு எதிராக சிறையில் தமிழ் இளைஞர்கள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆகஸ்ட் 8, 1985 இலிருந்து ஆரம்பித்துள்ளார்கள். இதற்கு ஆதரவாக யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்கள் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆகஸ்ட் 27, 85இலிருந்து ஆரம்பித்துள்ளார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

Tamils For A Democratic Eelam. B M Box 4338. London WC1N 3XX